விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 02 சனிக்கிழமை (18.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 290

## சரிகிறது மசகு எண்ணெய் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. அதன்படி (WTI)

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலைக் கண்காணிக்க பொதுநலவாய பிரதிநிதிகள்

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பிடம் தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறைந்தது 10 பேரையாவது அனுப்புவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், சார்க் நாடுகளிலிருந்தும் 30 இக்கும் மேற்பட்ட தேர்தல் கண்காணிப்பாளர்கள் வருகை தருவார்கள் என தாம் எதிர்பார்த்துள்ளதாகக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுக்கு எதிராக உரிமை மீறல் மனு


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச உடமைகளை தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்துவதாகக் கூறி மக்கள் விடு

19 ஆம் பக்கம் பார்க்க

# மக்கள் எனது பக்கம்




## அநுராதபுரத்தில் மகிந்த முழக்கம்

(அநுராதபுரம்)

மக்கள் என்னுடன் இருக்கும் வரை எவருடைய குற்றச்சாட்டுக்கும் நான் பதில் அளிக்கப் போவதில்லை. மக்கள் அதற்கு பதில் அளிப்பர் என முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமாகிய மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்.

தீர்க்கமான அரசியல் முடிவு ஒன்றை எட்டுவதற்கு நாம் இங்கு கூடியுள்ளோம். நாட்டுக்கு வலுவூட்டும் பயணத்தை ஆரம்பிக்க உள்ளோம். யுத்தம் முடிந்து என்னை வாழ்த்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## தீவக கடற்போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்பியது

(காரைநகர்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான கடல் மார்க்கம் ஊடான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பாதை சேவை இருவாரங்களின் பின்னர் மீண்டும் சேவையில் ஈடுபடத்தொடங்கியுள்ளது.

கடந்த இருவார காலமாக பாதை சேவைக்கான இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக சேவையில் ஈடுபடமுடியாத நிலை இருந்து வந்தது.

ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகருக்கும், காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்குமான மக்களின் போக்குவரத்துச் சேவைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் குறிப்பாக பாடசாலைகளுக்கு வருகைதரும் ஆசிரியர்கள், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், நீதிமன்றம், வைத்தியசாலைக்கு வருவோர் எனப் பலதரப்பட்டோரும் இடர்பாடுகளைச் சந்தித்திருந்தனர்.


இந்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபையின் தவிசாளருமான ஜெயக்காந்தனிடம்

19 ஆம் பக்கம் பார்க்க




## யார் பிரதமர்? தீர்மானிப்பது ஜனாதிபதி அல்ல

(கொழும்பு)



பொதுத்தேர்தலின் பின்னர் பிரதமர் யார் என்பதை தீர்மானிப்பது ஜனாதிபதி அல்ல என்றும், வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை யார் யாருக்கு ஆதரவு வழங்குகின்றார்களோ அவரே பிரதமராக முடியும் இந்த முடிவு ஒருபோதும் ஜனாதிபதி கையில இல்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனரோ அவரே பிரதமர் ஆகலாம்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மகிந்தவே பிரதமர் எனக் கூறுவோருக்கு பதிலளிக்கும் விதத்தில் பேசிய ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க

14 ஆம் பக்கத்தில்

## வடக்கு குடிநீர்த் திட்டம் மேலதிக நிதி கிடைக்கும்

# வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிப்பதா?

## யாழ். முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு தற்போது தமிழ் அரசியல்வாதிகள் உரிமைகோரி வருகின்றனர். என யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடந்த காலங்களில் அதிகளவான ஆசனங்களுடன் நாடாளுமன்றத்திற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மக்களின் நலன்களிலோ மேம்பாட்டிலோ எவ்வகையிலும் அக்கறை கொள்ளவில்லை.

தேர்தல் வெற்றிக்காக வெற்றுக்கோசங்களையும் பொய்யான வாக்குறுதிகளையும் வழங்கி மக்களாகிய எம்மை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், நிறைவேற்றப்படக் கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதுமான வாக்குறுதிகளை வழங்கி அவற்றை செயற்படுத்தக்கூடியவர்களுக்கே நாம் வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்வது அவசியமானது.

அதுமட்டுமன்றி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீண்டும் வீணைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளமையானது மக்களாகிய எமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும்போது, கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புகளை தமிழ்த் தலைமைகள் சரியாகப் பயன்படுத்தாததன் காரணமாகவே எமது மக்கள் அளவிட முடியாத துன்ப துயரங்களை எதிர்கொள்ள வேண்டிய அவலம் ஏற்பட்டது.

எதிர்காலங்களிலும் இவ்வாறான அவலங்களை எதிர்கொள்ளாத வகையில் மக்கள் சரியான அரசியல் தலைமைகளை தெரிவு செய்வதன் ஊடாகவே வாழ்வாதாரம் உள்ளிட்ட அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கும் உரிய வகையில் தீர்வுகாண முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் டக்ளஸ் தேவானந்தா விளக்கமளித்தார்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.


# மன்னாரில் மின் தடை பொதுமக்கள் அசௌகரியம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அடிக்கடி இடம்பெறும் மின் தடையால் அப்பகுதி மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் சேவை நிலையங்களின் பணிகளும் தடைப்படுகின்றன.

இவ்வாறு அடிக்கடி இடம்பெறும் மின் தடையால் மன்னார் நகர புகையிரத சேவைகளும் தடைப்படுகின்றன. மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணம் செய்யும் இரவு 10.45 மணி ரயில் சேவையின்போதும் இவ்வாறு மின்சாரம் தடைப்படுவதனால் பயணத்திற்கான பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்வதிலும் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (140)



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.யினால் வழங்கப்பட்ட புனித நோன்பிற்கான உலர் உணவுப் பொதிகள் சாவகச்சேரியில் மீள்குடியேறி வாழும் குடும்பங்களுக்கு பேரவையின் முன்னாள் தலைவர் எம்.எஸ். ரஹிமினால் வழங்கப்படுவதைக் காணலாம். (105)

# மன்னார் புகையிரத நிலையத்திற்கு இன்னமும் போக்குவரத்து வசதி இல்லை

## பொதுமக்கள் விசனம்

(மன்னார்)

மன்னார் புகையிரத நிலையம் அமைக்கப்பட்டு தற்போது ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இப்புகையிரத நிலையத்திற்கும் மன்னார் நகரப் பகுதிக்கும் இடையிலான பேருந்து சேவைகள் இன்மையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்புகையிரத நிலையமானது மன்னார் நகரப் பகுதியிலிருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சவுத்வார் எனும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்புகையிரத நிலையத்திற்கு செல்வதற்கு எவ்வித பேருந்து வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. இருப்பினும் இப்புகையிரத நிலையத்திற்கு முச்சக்கர வண்டியில் செல்வதற்கு 300 ரூபா வரை அறவிடுவதாகவும் இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக மன்னார் புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் பேருந்து போக்குவரத்துச் சபையினரிடம் வினவியபோது, மன்னாரிலிருந்து கொழும்புக்கான பேருந்து சேவைகள் இடம்பெறுவதனால் புங்கயிரத நிலையத்திற்கான பேருந்து சேவையினை ஏற்படுத்த முடியாமல் உள்ளதாகத் தெரிவித்தார்.

இப்புகையிரத நிலையத்திற்கான பேருந்து சேவையினை விரைவில் ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# அறிவியல் நகரில் விபத்து; குடும்பஸ்தர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

அறிவியல் நகரில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பாரதிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த முனியாண்டி கதிரமலை (வயது - 40) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை அறிவியல் நகர் சந்திக் கருகாமையில் துவிச்சக்கர வண்டியும் இராணுவ வாகனமும் விபத்துக் குள்ளாகியிருந்தன. இதன்போது படுகாயமடைந்த குடும்பஸ்தர் இராணுவத்தினரால் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (இ)

## பரிசளிப்பு விழா

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் திருமதி நவலட்சுமி சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. சிவானந்தராஜா, சமூக ஆர்வலர் சைமன் சந்தியாப்பிள்ளை, தீவக ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ப. இராதாக் கிருஷ்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வண.பிதா செ. ஜோசப் பேடினன், ஐ.ஓ.எம். இணைப்பாளர் மு. சுரேஷ்குமார் முதலானவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இங்கு வெளியிடப்படும் 'ஆதிசசுடர்' மலரைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் வெளியிட்டு வைக்கவுள்ளார். வெளியீட்டுரையினை பேராசிரியர் க.தேவராசா நிகழ்த்தவுள்ளதோடு முதற்பிரதியை பழைய மாணவன் அ. இருதயநாதன் பெற்றுக்கொள்ளவுள்ளதோடு ஆய்வுரையை விரிவுரையாளர் பா. மகாலிங்கசிவம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(06)

# நூல் வெளியீடு

(இணுவில்)

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தொகுத்துள்ள பதிவும் பகிர்வும் நூல் வெளியீடு நாளை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெறவுள்ளது. மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வானது தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளதுடன் நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.டி. சிவநாதன் நிகழ்த்தவுள்ளார். கருத்துரைகளை பிஷப் சௌந்தரம் ஊடகக் கற்கை மையத்தின் பணிப்பாளர் அருட்திரு ரூபன், மரியாம்பிள்ளையும் பேராசிரியர் செ. யோகராசாவும் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ள எழுகலை இலக்கியப் பேரவை அனைவரையும் வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளது.



காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன் மாணவியொருவருக்குப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (06)

# மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக ஜனாதிபதி சிறிசேனவின் மனதை மாற்றியது எது?

## உபுல் ஜோசப் பெர்ணாண்டோ கட்டுரையிலிருந்து

சீனாவின் கடற்படைத் தலைவர் சாவோ சமீபத்தில் சீன ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது: "இந்து சமுத்திரம், மற்றைய நாட்டுக் கடற்படைகள் வர முடியாதபடி இந்தியாவின் கொல்லைப் புறமாக மட்டும் இருக்க முடியாது", என்று சீன பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது. மக்கள் விடுதலை இராணுவத்தின் (பி.எல்.ஏ) கடற்படை தனது அணி யினை இந்து சமுத்திரத்தில் விரிவாக்கும்போது, சமீபத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கும் வெகு சமீபத்தில் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்த சம்பவங்களைப் போல, அதன் உத்தியோகத்தர்கள் தங்கள் நோக்கம் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுடன் இயக்கப்படுகிறதே தவிர இந்தியாவை இலக்கு வைத்து அல்ல என்று வலியுறுத்தி இந்தியாவின் கவலைகளை தணிக்க முயன்றார்கள், என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

மூத்த தளபதி சாவோ யி செவ்வாயன்று பீஜிங்கிலுள்ள இந்திய ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தது "பூகோள ரீதியாகப் பேசும்போது இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும் மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தையும் ஸ்திரமாக்குவதற்கு ஒரு விசேட பாத்திரத்தை இந்தியா ஏற்கவேண்டி உள்ளது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்தியப் பெருங்கடல் தனது கொல்லைப் புறம் என்று இந்தியப் பகுதியினர் கருதுவார்களானால், ஏன் ரஷ்யா, அமெரிக்கா, மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளின் கடற்படை இந்து சமுத்திரத்தில் சுதந்திரமான கடற் பயணத்தைச் செய்யும் உரிமையை கொண்டிருக்கிறது என்பதை அதனால் விளக்க முடியாது" என்று அவர் சொன்னார்.

ஒரு அமெரிக்க கல்வியாளர் இந்து சமுத்திரத்தில் மோதல்கள் ஏற்படச் சாத்தியம் உள்ளது என்று தெரிவித்துள்ளார் என்றும் அவர் சொன்னார். "அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை" எனத் தெரிவித்த மூத்த கடற்படைத் தலைவரான சாவோ, "ஆனால் சில நாடுகளின் கருத்து, அது அவர்களின் கொல்லைப்புறம் என்பதாக இருந்தால் அதற்கான சாத்தியத்தை தவிர்த்துவிட முடியாது" என்றும் சொன்னார். எனினும் இந்திய மூலோபாய வட்டாரங்களில் இலங்கைக்கு கடந்த வருடமும் மற்றும் பாகிஸ்தானுக்கு இந்த வருட ஆரம்பத்திலும் சீன விடுதலை இராணுவ கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் வருகை தந்த திட்டம் தொடர்பாக எழுந்துள்ள கவ–லையை சீன நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த இரண்டு விஜயங்களுமே வழமையானவை என சீனா விளக்கமளித்துள்ளது.

"பெரும்பாலான நீர்மூழ்கிக் கப்பல்கள் பயணம் செய்யும்போது அதைப்பற்றிய கவலைகளை குறைக்கவும் பரஸ்பர நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் வேண்டி அண்டை நாடுகளுக்கு அறிவிப்புச் செய்வோம்" என மக்கள் விடுதலை இராணுவ கடற்படை கல்வி நிறுவன ஆய்வாளரான சாங் வி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்து சமுத்திர. பிராந்தியம் மீதான சீனாவின் அவதானம் வர்த்தகம் சார்பாக இயக்கப்படுகிறது, முக்கியமான சக்தி இறக்குமதிகள் கடலின் ஊடாக அனுப்பப் படுகின்றன. இந்து சமுத்திரத்தில் சீன கடற்படையின் இருப்பு கப்பல்களின் கடல்வழிப் பாதுகாப்பு மற்றும் கடல்வழித் தொடர்பாடல்களை உறுதி செய்வதற்காகவே. நம்பிக்கையை வலுப்படுத்த நாங்கள் முயற்சிக்க



வேண்டும். இந்து சமுத்திர கடற்பயணம் தொடர்பாக இன்னமும் சந்தேகங்கள் இருக்குமானால் அப்போ நாங்கள் இன்னமும் போதுமானளவு பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கவில்லை என்றே நான் நம்புகிறேன்" என்றார் சாங்.

மேற்குறித்த அறிக்கை, மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கு சீனா முயற்சி செய்கிறது மற்றும் அதன் நிகழ்ச்சி நிரல் இலங்கையில் சீன நிதியுதவி திட்டங்கள் இந்தியாவிற்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்காது எனத் தெரிவித்து இந்தியாவின் ஆசீர்வாதத்தை தேடுவதுதான் என்பதை தெளிவாக செ[illegible]ந்துகிறது. அதேவேளை மகி[illegible]றும் சீனா ஆகியோரது நிகழ்ச்சி நிரல்கள் ஒரே போலுள்ளன, மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கும் மைத்திரியின் முடிவு இன்னும் இரகசி யமான ஒன்றாகவே உள்ளது.

சமீபத்தில் மைத்திரி சந்திரிகாவை சந்தித்தபோது அவர் சந்திரிகாவிடம் சுட்டிக்காட்டியது, ஸ்ரீ.ல.சு.க பிளவடைந்தால், ஐ.தே.க. ஒரு அரசாங்கம் அமைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிடும் மற்றும் உளவுத்துறை தகவல்கள் மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கும் முடிவை எடுக்கும்படி எனக்கு வழிகாட்டுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். சிவில் சமூகப் பிரதி நிதிகள் அவரைச் சந்தித்தபோதும் இதே கதையைத்தான் அவர்களிடமும் சொன்னார். எனினும், மகிந்த புலிகளைப் போரில் வென்று ஒரு பொதுத் தேர்தலை 2010இல் நடத்தியபோது, புகழின் உச்சத்தில் அவர் இருந்தபோதும் அவரால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறமுடியவில்லை என்று அவர்கள் வாதிட்டார்கள் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பின்படி ஒரு தனிக்கட்சிக்கு அத்தகைய அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

இப்போது எழுந்துள்ள கேள்வி ஐ.தே.க. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பெறும் என்கிற பயத்தை மைத்திரியின் மன–தில் விதைத்தவர்கள் யார்? மற்றும் உளவுத்துறை அறிக்கைகளின் அடிப்படையில் அப்படியான ஒரு நகர்வை மைத்திரி எடுக்க முடிவு செய்திருந்தால், எதன் அடிப்படையில் புலனாய்வுப் பிரிவுகள் அந்த அறிக்கையை தயார் செய்தன? காமினி திசாநாயக்கா ஐ.தே.க. விலிருந்து விலகி டி.யு.என்.எப் கட்சியை நிறுவிய பின்னர், ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் கீழிருந்த ஐ.தே.க. விடம் திரும்பி வர விரும்பியபோது, ரணில் மற்றும் சிறிசேன குரே ஆகியோர் காமினியின் மீள் வரவை கடுமையாக எதிர்த்தார்கள். எனினும் விஜேதுங்க காமினியை தேசியப் பட்டியலில் உள்வாங்கி அவருக்கு ஒரு அமைச்சர் பதவியும் வழங்கினார்.

விஜேதுங்கவுக்கு நெருக்கமான "3பி" (3ட) அமைப்பு காமினியை திரும்பவும் ஐ.தே.க. வுக்குள் ஒரு மீள் வரவு செய்ய உதவும் வகையில் விஜேதுங்காவின் மனதை மாற்ற உதவின என்று சொல்லப் படுகிறது. இந்த '3பி' அமைப்பு எனச் சொல்லப்படுவது (Black Money, Blackmail, Black Rist) கறுப்புப் பணம், பிளாக்மெயில் மற்றும் பிளாக் றிஸ்ட் என்பனவாகும். எனவே காமினி இந்த 3பி அமைப்பினரை விஜேதுங்கவின் மனதை மாற்றும்படி இணங்க வைத்தார். இந்த பிளாக் றிஸ்ட் புலனாய்வு பிரிவினர் ஐ.தே.க. தேர்தலில் வெல்வதற்கு காமினி உள்வாங்கப் படவேண்டும் என சொல்லி வைத்தனர். இதுவரை இது நிரூபிக்கப்படாத ஒரு கொள்கை. ரணில் – குரே முகாம் இந்த அறிக்கைகளுக்கு முரணாக வேலை செய்தது.

மகிந்தவின் வேட்புமனு தொடர்பாக பல விதமான வதந்திகள் பரவுகின்றன. இந்த வதந்திகளில் உண்மை இல்லாமலிருந்தாலும் இந்த அரசியல் விளையாட்டில் மகிந்த மற்றும் சீனா என்பன ஒரு தற்காலிக வெற்றியை அடைந்துள்ளனர்.

## வடமாகாண அதிபர் இடமாற்றம் இரத்துச் செய்யுமாறு உத்தரவு

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிபர் களின் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப் பிரிய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அண்மையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சில பாடசாலைகளின் அதிபர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இது பல்வேறு மட்டங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் சில பாடசாலைகளின் அதிபர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் பல்வேறு மட்டங்களின் கவனத்திற்குகொண்டு வந்திருந்தனர். அந்த வகையில் இந்த விடயம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

அவர் தனது 10-07-2015 திகதியிடப்பட்ட PE/2015/19/JAF03 இலக்கமுடைய கடிதம் மூலம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட அதிபர்கள் இடமாற்றம் தேர்தல் சட்ட விதிகளுக்கு மாறானது எனவும் எனவே இக்காலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட அதிபர்கள் இடமாற்றம் தொடர்பில் தனக்கு விளக்கம் அளிக்குமாறும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரை கோரியுள்ளதோடு அது வரைக்கும் குறித்த அதிபர்கள் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு அறிவித்தல் விடுத்துள்ளார். குறித்த தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(160,29)

## செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் இந்த வருடத்திற்கான மஹோற்சவ விபரங்கள் மஹோற்சவ பொறுப்பாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

மஹோற்சவ விபரங்களின் படி அடுத்த மாதம் 14 ஆம் தி-கதி இரவு 08 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. வருடாந்த மகோற்சவத்தின் விசேட திருவிழாக்களான பூங்காவனம் 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை அன்றும், சப்பறத் திருவிழா 27.08.2015 வியாழக்கிழமை அன்றும், தேர்த் திருவிழா 28.08.2015 வெள்ளிக்கிழமை அன்றும் மற்றும் தீர்த்தத் திருவிழா 29.08.2015 சனிக்கிழமை அன்றும் நடைபெறவுள்ளன. காலைத்திருவிழாக்கள் காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழாக்கள் மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன. இத் திருவிழா நிகழ்வில் அனைத்து அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஏமாற்றங்களும், கற்பனைகளும்தான் வாழ்க்கையையும் அரசியலையும் இன்றுவரை நகர்த்திக் கொண்டிருக்கிறது. -அன்புவழியூர்க்கவிராயர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## காதில் பூச்சுத்துதல் தொடர்கிறது....

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் அறிவிக்கப்பட்டு விட்டன. ஒவ்வொரு வேட்பாளரும் தன்னுடைய இலக்கத்தை விளம்பரப்படுத்தி, தன்னுடைய கீர்த்தி என்ன பெருமை என்ன, தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டு அலற ஆரம்பித்து விட்டார்கள்.

தமிழ்மானச் சிங்கம், தன்னாட்சிக் காவலன், தளராத கொள்கைப் பிடிப்பாளன், உரிமைக்குரல் மங்கை, தீர்வெடுக்கும் தினவு கொண்டோன், உரிமைப் பிரச்சினையை உலகறியச் செய்த ஊடகப் போராளி....

இவ்வாறெல்லாம் தமிழ் மக்களுக்காகத் தங்கள் இன்னுயிரையும் இழக்கத் தயாரான "ஒருமாத உடனடிப் போராளிகளை" நாம் ஊடகங்களில் பார்த்துப் புல்லரிக்கப் போகிறோம்.

தேர்தல் முடிந்த பிற்பாடு அடுத்த ஐந்து வருடத்துக்கும் இந்தப் போராளிகள் எல்லாம் தங்கள் தங்கள் வசதி வாய்ப்புகளை எடுத்துக்கொண்டு, பூனைகளாகி அடுப்பங்கரையில் போய்ப் படுத்து விடுவார்கள் என்பதும், நிலைமைகள் இப்படியேதான் தொடரும் என்பதும் நாம் அனுபவத்தில் அறிந்த சங்கதிகள்.

தமிழ் மக்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்து வாக்களிப்பவர்கள்ல்ல; உணர்ச்சிகரமாக எதையாவது "ஏத்தி"விட்டால் ஆவேசமாக எழுந்து போய் வாக்களித்து விட்டு வருவார்கள் என்றுதான் நேற்று முளைத்த வேட்பாளர்களும் உணர்ச்சிகரமாக எதையெதையோ அடித்து விடுகிறார்கள்.

"எமது மக்களைக் கொன்றொழித்தவர்களைத் தோற்கடிக்க எனக்கு வாக்களியுங்கள் மக்களே" என்று அறைகூவுகிறார் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் ஒரு வேட்பாளர்.

அவர்களைத் தோற்கடித்து உங்களை வெல்ல வைத்து விட்டால் தமிழ் மக்களுக்கு என்ன விமோசனம் நடந்துவிடும்? அதற்கான உங்கள் திட்ட வரைபு என்ன? வழிமுறை என்ன? என்ற கேள்விகளை எல்லாம் விட்டுவிடுவோம்.

அவற்றையெல்லாம் எமதருமைத் தமிழ் வாக்காளப் பெருமக்களே இதுவரை கேட்டதில்லை என்னும்போது நமக்கெதற்கு வம்பு!

தமிழ் மக்கள் கொல்லப்பட்டதில் பங்கேதும் வகிக்காத எந்தத் தலைமையை நீங்கள் சிபார்சு செய்கிறீர்கள் என்று நாங்கள் பார்க்க வேண்டுமல்லவா?

தென்னிலங்கையில் எதிரெதிராக உள்ள இரு தரப்புகளிடமும் உள்ள இனவாதத்தையும் சிறுபான்மை எதிர்ப்பு மனோபாவத்தையும் புரிந்துகொண்டு, அவர்களிடமிருந்து எமது தீர்வைப் பெறுவதற்கான திட்டத்தையும் வழிமுறையையும் விளக்கிச் சொன்னால் அதிலொரு நியாயம் இருக்கும்.

மாறாக, நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி அங்கே ஆட்சிக்கு வந்துவிட்டால், அதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான தீர்வும் வந்துவிடும் என்று தேர்தலுக்கு முன் சொல்லிவிட்டு, பிறகு ஜகா வாங்கிவிடுவதை இன்னும் எவ்வளவு காலத்துக்குச் செய்து கொண்டிருக்கப் போகிறீர்கள்?

நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி என்ற பெயரே, சம்பிக்க ரணவக்க தனது ஹெல உறுமயவுக்கு வைத்த புதுப் பெயரான ஐக்கிய தேசிய நல்லாட்சி முன்னணி என்பதிலிருந்த உருவானதுதான்.

அந்த நல்லாட்சிக்கான முன்னணியின் அரசாட்சியில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறவர் சம்பிக்க ரணவக்க தான். அந்த ஆட்சி மட்டும் எப்படி தமிழர்களுக்கான தன்னாட்சித் தனியலகை – உரிமைகளை வாரி வழங்கிவிடப் போகிறது?

அந்த நல்லாட்சிக்கான கட்சியிலுள்ளவர்கள் மட்டும் தமிழர்களைக் கொல்லாத புனிதத் தலைவர்களா என்ன? தேர்தல் வாக்குகளுக்காக உணர்ச்சிகரமாக எதையாவது சொல்லி காதில் பூச்சுற்ற வருபவர்களை முதலில் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

*- ஆசிரியர்*

# மகிந்தவை அரசியல்ரீதியாக தோற்கடிக்க தவறிவிட்டனர்

## அநுரகுமார திசாநயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டை மாத்திரமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் நாசமாக்கியுள்ள மகிந்த ராஜபக்ஷவை அரசியல் ரீதியாகத் தோற்கடிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தவறிவிட்டதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இருவரின் வேறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விட்டனர். கடந்த ஆறு மாத காலத்துக்குள் மகிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதன் பின்னரும் மகிந்த தெரிவித்த கருத்துக்கள் முற்று முழுதாக இனவாதத்தைத் தூண்டுவதாக அமைந்தது.

நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்யும் நிலைப்பாடே காணப்பட்டது. இதனைத் தோற்கடிப்பதற்கு ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ பங்களிப்புச் செய்யத் தவறிவிட்டார்கள் என்றும் கூறினார். முன்னாள் ஜனாதிபதியின் இந்த செயற்பாட்டை தீர்க்கமாக முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருந்தால் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன தற்பொழுது முகங்கொடுத்திருக்கும் பிரச்சினையை எதிர்கொண்டிருக்க நேரிட்டிருக்காது.

மகிந்த ராஜபக்ஷ, அவருடைய குடும்பத்தினர் மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த நிதி மோசடி, கொலை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக தண்டனை பெற்றுக்கொடுத்திருந்தால் மகிந்த அரசியலுக்கு வந்திருக்க மாட்டார். மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.ம.சு.மு.யில் தேர்தலில் போட்டியிட அனுமதித்திருப்பது ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையாகும்.

இருந்தபோதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்திருக்கும் தீர்மானம், குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படாது மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் போன்ற அறிவிப்புக்களுக்கு மதிப்பளிப்பதுடன், அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஐந்து பிள்ளைகளை பெற்றுக் கொள்வேன்

## ஊடகங்களுக்கு ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எங்களுடைய திருமண வாழ்க்கையை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த திருமண வாழ்க்கையில் நான் ஐந்து பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வேன் என்று மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்த ஹிருணிகா தொடர்பில் தற்போது சில வதந்திகள் பரவிவருகின்ற நிலையிலேயே, அது தொடர்பில் அவர், ஊடகங்களுக்கு விளக்கமளித்துள்ளார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ள ஹிருணிகா,

திருமணத்துக்கு முன்னரே நான் கர்ப்பம் தரித்ததாக சிலர் வதந்திகளைப் பரப்பிவருகின்றனர்.

அவ்வாறு கூறுபவர்கள், இன்னும் ஒன்பது மாதங்களில் உண்மையை அறிந்துகொள்வார்கள். எனது திருமண வாழ்வில், ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுக்கப் போகின்றேன்.

நான் கர்ப்பம் தரித்துள்ளதாலேயே திடீரென திருமண பந்தத்தில் இணைந்ததாக சிலர் கூறுகின்றனர். நான் அவர்களுக்கு ஒரே ஒரு விடயத்தை மாத்திரமே சொல்ல விரும்புகின்றேன். ஒன்பது மாதங்களில் பார்த்துக்கொள்ளுங்கள் எது உண்மை என்று எனக் கூறினார். ஹிரான் என்னுடைய மூன்றாவது காதலன். என் தந்தையைப் போல் என்னைப் பார்த்துக் கொள்ளும் ஒருவரையே நான் இதுவரை காலமும் தேடிக் கொண்டிருந்தேன். அது தற்போது நிறைவேறியுள்ளது எனக்கூறினார்.

# 5 இலட்சத்து 25 ஆயிரம் பேர் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பம்

(கொழும்பு)

தேர்தல் கடமையில் ஈடுபட எதிர்பார்த்துள்ள அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்காக ஐந்து இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். இம்முறை பொதுத தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை கடந்த 14 ஆம் திகதி நிறைவுபெற்றது.

இதேவேளை, தேர்தலில் வாக்களிப்பதற்கான தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கானவிண்ணப்பங்களை ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரை ஏற்பதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாத அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்களிப்பதற்காக தற்காலிக அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மைத்திரிபாலவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இலங்கை பிக்குகள் அமைப்பு கோரிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்புடைய இலங்கை பிக்குகளின் அமைப்பின் தலைவர் வட்டினாபஹா சோமானந்த தேரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை அண்மையில் ஊடகங்களிடம் கூறியுள்ளார். தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தோற்கடிக்கப்படுவாரென மைத்திரி கூறியிருந்ததை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதன்மூலம் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு பெரிய அளவில் பாதிப்புக்கள் ஏற்படும்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி சிறிசேன இவ்வாறான கருத்துக்களைக் கூறமுடியாது. இது கட்சியின் ஒழுக்க விதிமுறைகளை மீறும் ஒரு செயலாகும்.

தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு மறைமுகமான ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே ஜனாதிபதி சிறிசேன இவ்வாறான கருத்துக்களை கூறியுள்ளார். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரிடம் எழுத்து மூலமான வேண்டுகோளை தாம் விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.


7
3
2
1
8
5
6
9
4
10
வீணையே உங்கள் சின்னம்
சேவையே எங்கள் எண்ணம்
(இ)

# பிரதமர் தெரிவு அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது

## என்கிறார் சரத் என் சில்வா



இந்த நாட்டின் பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

'பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவிற்கு அமைய பிரதமர் தெரிவு செய்யப்படவேண்டும்.

எனினும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் தெரிவு தொடர்பில் ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்து ஜனநாயகத்திற்கு விரோதமானது.

பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ அவரையே பிரதமராக தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறான ஒருவரை நியமிப்பதே ஜனாதிபதியின் கடமையாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிழையான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், பெரும்பான்மை இல்லாத ஒரு வரை பிரதமராக தெரிவு செய்தார். இது அரசியல் அமைப்பிற்கு முரணானதொரு நடவடிக்கையாகும்.

அரசியல் அமைப்பை பாதுகாப்பதனை விடவும் ஜனாதிபதி, தம்மை பதவியில் அமர்த்திய தரப்புடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையை பாதுகாத்துக் கொள்ள முயற்சித்தார். இது ஜனநாயகமான நாடொன்றிற்கு உசிதமான காரியமல்ல' என்றார்.

# ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரகடனம் அடுத்தவாரம்

(கொழும்பு)

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரகடனம் அடுத்த வாரமளவில் வெளியிடப்பட உள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதில், ஓராண்டு காலத்திற்குள் பத்து இலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், மக்களுக்கு பல்வேறு வழிகளில் நிவாரணங்களை வழங்குதல் போன்ற நலத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மேல் மாகாணத்தை நாகரிக வலயமாக மாற்றுதல், 2500 கிராம வீதிகளை புனரமைத்தல், பாரியளவிலான முதலீட்டு திட்டங்களை ஆரம்பித்தல், பெந்தொட்டை முதல் மிரிஸ்ஸ வரையிலான பகுதிகளை சுற்றுலா வலயமாக மாற்றுதல் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதேவேளை, வாடகை வீடுகளில வாழ்ந்து வருவோருக்கு சொந்த வீடுகளை வழங்குதல், குருநாகலில் வொக்ஸ்வோகன் கார் உற்பத்தி கைத்தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறான நல்ல திட்டங்களை உள்ளடக்கிய எமது பிரகடனம் வெளியிடப்படும்' என்றும் கூறினார்.

# ஜனாதிபதியின் 14 ஆம் திகதி உரையை மீண்டும் ஒலி, ஒளி பரப்ப வேண்டாம்

## தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவு



கடந்த 14ஆம் திகதியன்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையை மீண்டும் ஒலி, ஒளிபரப்ப வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர், இலங்கையின் இலத்திரனியல் ஊடகங்களிடம் கோரியுள்ளார்.

இந்த உரை, ஆகஸ்ட் 17 ஆம் திகதியன்று இடம்பெறப் போகும் தேர்தலை மையமாக்கொண்டு மேற்கொள்ளப்பட்டமையால் அதனை ஒளி ஒலி பரப்ப வேண்டாம் என்று அவர் கேட்டுள்ளார்.

தமக்கு கிடைத்த பல முறைபாடுகளை ஆராய்ந்த பின்னரே மகிந்த தேசப்பிரிய இந்தக் கோரிக்கையை ஊடக தலைமைகளுக்கு அனுப்பியுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஜனாதிபதி ஆற்றிய உரையை 15 ஆம் திகதியன்றும் சில ஊடகங்கள் ஒலி: ஒளிபரப்பு செய்தன.

இது ஏற்கனவே தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு எதிரான நடவடிக்கை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் மீள் பிரவேசத்தால் பெரும் நெருக்கடியில் ஐ.ம.சு.மு.

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்டானை தொகுதியில் மக்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் நல்லாட்சியா அல்லது குடும்ப ஊழல் அரசியலா வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

எதிர்வரும் 17ஆம் திகதி நாட்டில் அனைத்து மக்களும் யானைசின்னத்தை வெற்றிபெறச் செயது நாட்டை கட்டியெழுப்புவோம் நல்லாட்சி க்கான கொள்கையை இல்லா தொழித்து திருடர்களை தேர் தலில் நிறுத்தி நாட்டைச் சீர்கு லைக்க ஶ்ரீலங்கா சுதந்திரக் கட் சியின் ஒரு சாரார் முயற் சிக் கின் றனர். திருடர்களை மட்டுமன்றி திருடர்களின் மனைவிமார்களையும் வேட்பாளர்களாக நியமித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது கொள்கையிலிருந்து விலகவில்லை. அவரது நிலைப்பாட்டை அவர் தெளிவாக நாட்டுக்கு வெளியிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷவுடன் தமக்கு தொடர்பு இல்லை என்பதையும் அவர் பகிரங்கமாக வெளியிட்டார். தன்னிச்சையான தீர்மானத்துடன் நாட்டில் எவரும் அரசாங்கம் அமைக்க முடியாது என்பதை மக்கள் உணர வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் 17ஆம் திகதி அமோக வெற்றிபெறுவது உறுதி. நாம் ஐந்து வருடத் திட்டத்தை நாட்டில் நடைமுறைப்படுத்துவோம். நாட்டில் அனைத்துப் பிரதேசங்



களும் அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்படும். 10 இலட்சம் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு அனைத்து மக்களினதும் வருமானத்தை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாம் கடந்த ஜனவரி 8ஆம் திகதி குடும்ப ஊழல் ஆட்சிக்கு முடிவு கட்டினோம். இனி இந்த நாட்டில் ஊழல் மோசடிக்கு இடமில்லை. மக்கள் தமது எதிர்காலத்தை சிந்தித்து பொறுப்புடன் செயற்படுவது முக்கியம் என்றார்.

# எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்திலிருந்த ஜனாதிபதி மைத்திரிபாலவின் படம் மாயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் மாட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் திடீரென அகற்றப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கும் நிலையில், கொழும்பு 7 இல் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் அவரது படம் தொங்க விடப்பட்டிருந்தது.

எனினும், நேற்றுமுன்தினம் ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் அங்கு செய்தியாளர் மாநாட்டை நடாத்திய போது, மைத்திரிபால சிறிசேனவின் படம் அகற்றப்பட்டு, அங்கு வெற்றிலைச் சின்னத்துடன் கூடிய பதாகை ஒன்று பொருததப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை அடுதது, அவரை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்ட நீதிமன்றம் மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணணியினதோ தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை நீக்குவதற்குத் தாம் திட்டமிடவில்லை என்று சுசில் பிரேமஜெயந்த தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் முறைப்பாடுகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு 3 தொலைபேசி இலக்கங்களை, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே தேர்தல்கள் ஆணையாளர் இந்த இலக்கங்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதற்கமைய, 011 2887756, 011 2887759 மற்றும் 011 2877631 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டோ அல்லது 011 288 7717 மற்றும் 011 2877636 ஆகிய பக்ஸ் இலக்கங்களுக்கு முறைப்பாடுகளை அனுப்பியோ, தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என அவர் மேலும் கூறினார்.

# அடுத்த பிரதமர் தொடர்பாக பிரச்சினை ஏற்படுத்தக் கூடாது

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



(கொழும்பு)


அடுத்த பிரதமர் யார் என்பது தொடர்பில் யாரும் பிரச்சினை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாதென எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் தேர்தலின் பின்னர் பிரதமர் யார் என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுவரையில் பிரதமரை நியமிப்பது தொடர்பில் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேணடாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் கூட்டணியின் பிரதமர் குறித்து பேசுவதற்கு பதிலாக தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் அவதானம் செலுத்த வேணடும் என அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட அடையாள அட்டை




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வதியும் மாற்றுத்திறனாளிகளை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அவர்களின் தரவுகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர்களின் மருத்துவ விபரங்கள் அடங்கிய விசேட அடையாள அட்டைகளை வழங்கவுள்ளதாகவும் வடமாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'வடமாகாணத்தில் விசேட தேவைககுட்பட்டவர்கள் ஆயிரக் கணக்கானோர் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக, நடந்து முடிந்த யுத்தத்தினால் தமது அவயவங்களை இழந்த பலர் விசேட தேவையுடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். எனினும், இவர்களின் எண்ணிக்கை, விசேட தேவையின் தன்மை போன்ற தரவுகள் தெளிவாக இல்லை. இதற்காக சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் தரவுகள் திரட்டும் வேலைத திட்டமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக தொண்டர்களை வேலைக்கு அமர்த்தி வீடு வீடாகச் சென்று தரவுகள் சேகரிக்கப் [illegible] அவர்களின் விபரங்கள் க [illegible] ப்படுத்தப்படவுள்ள [illegible] அந்த தரவுகளின் அடிப்படையில் சுகாதாரத் திணைக்களத்தினால் விசேட நடமாடும் மருத்துவ சேவைகள் நடாத்தப்பட்டு, அவர்கள் தொடர்பாக மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருத்துவ நிலை தொடர்பான விபரங்களுடன் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதன்மூலம் விசேட தேவையுடையவர்களுக்கான தேவைகளை இலகுவாக இனங்காண முடியுமெனவும் அவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் உத்தேசித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.'

# பாடசாலை மாணவர்களுக்கு பேரீச்சம்பழங்கள் வழங்கல்



(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 90 பாடசாலை மாணவர்களுக்கு பேரீச்சம்பழங்களை உலக உணவுத் திட்ட நிறுவனம் அண்மையில் வழங்கியுள்ளது.

உலக உணவுத் திட்ட நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவினை மட்டுமன்றி பேரீச்சம் பழங்களையும் வழங்கி மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்தும் செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளது.

மாணவர்களுக்கு தேவையான பேரீச்சம்பழங்கள் வவுனியா மாவட்ட உலக உணவுத் திட்ட கிளையின் உதவியுடன் வவுனியா மாவட்ட செயலகத்தின் கண்காணிப்பில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆடிப்பிறப்பினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கலை,இலக்கியப்போட்டி முடிவுகள்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகத்தினால் ஆடிப்பிறப்பினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளதாக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பணிப்பிலும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையிலும் வவுனியா பிரதேச செயலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு


பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தினை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவன் சி.கிரிவாசன் இரண்டாம் இடத்தினை வவுனியா சைவப பிரகாச மகளிர் கல்லூரி மாணவி கு.குலவிழி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஜெரிக்ஷிகா ஆகியோரும் பெற்றுக்கொண்டனர

கவிதைப் பாடல் போட்டியில் முதலாம் இடத்தை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவி சி.சுலக்சிகா இரண்டாம் இடத்தினை வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மாணவி தே.டிலானி, வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி ம.துவர்ணியா ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

தனிப்பாடல் போட்டியில் முதலாம் இடத்தினை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி இ.துஷ்யந்தி இரண்டாம் இடத்தினை வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி த.சுபர்ணா மூன்றாம் இடத்தினை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவி ம.புஸ்பகுமாரி பெற்றுக்கொண்டனர்.

கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி கி.தர்ஷா, இரண்டாம் இடத்தினை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி சு.கிருபாலினி, மூன்றாம் இடத்தினை வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி ஜெ.சதுர்ஷிகா ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

# "போதை எமக்கு பகை" போதைப்பொருள் விழிப்புணர்வு



(மானிப்பாய்)

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் வேண்டு கோளிற்கிணங்க போதையற்ற தேசத்தினை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் யூலை 9 - ஆகஸ்ட் 9 வரையான காலப்பகுதியில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை) யில் போதை எமக்கு பகை எனும் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை இடம் பெற்றது

'போதை எமக்கு பகை' எனும் தொனிப்பொருளில் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலாவின் வழிகாட்டலில் போதை விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் செயலாளர் மா.நேருவின் ஒழுங்குபடுத்தலில் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாழ்கையில் இத்தெருவெளி ஆற்றுகை கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரியின் மைதான முன்றிலில் இடம்பெற்றது. இவ்வாற்றுகையினை 6, 7 , 8 , 9,10 ஆகிய தரங்களினை சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர் கள் கண்டு இரசித்தனர் இவ்வாற்றுகையானது போதைப் பொருள் பாவனையினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள். அதனால் குடும்பத்தில் ஏற்படுகின்ற இடர்பாடுகள் என்பவற்றினை வெளிப்படுத்தின.

இவ்வாற்றுகையில் ஆற்றுகையாளர்களாக உ.கரிஸ், யே.சானுஜன், சு.கலைக்சன், ரிதுசன் சிந்துஜன்,சி.சிவானுஜன், வி.கனிஸ்ரன், குயின்சன், தி.தனுஜன், தி.திஸ்னுகன், கு.தவேன்சன், ஶ்ரீ.சாதுசன், ச.குபேரன், திவாகர் ஆகியோர் நடித்துள்ளார்கள். பின்னணி இசையில் டொல்கி யே.யதுசன், சைட்றம் அபிசேக் ஆகியோரும் பாடல்கள் பா.ஜெயரூபன, பாடகர்கள் தக்சாந், ஆகியோர் மேற்கொண்டிருந்தார்கள்.

(63)

## முரசின் இன்றைய பலன்

18.07.2015 சனிக்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 2 ஆம் திகதி.
மரண யோகம் / துதியை திதி கரிநாள்
ஆயிலிய நட்சத்திரம் முன்னிரவு - 7.21 வரை பின் மகம்
இராகு காலம் 9.00 - 10.30 வரை சுப நேரம் 3.00 - 4.30 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பரீட்சைப்பெறுபேறு பாதிக்கப்பட்டதால் கல்விப்புலத்தைக் கைவிடல்

**ரிஷபம்**
இடைத்தங்கல் நாட்டினின்றும் தாயகம் வர ஆதங்கப்படல்

**மிதுனம்**
மணவாழ்வில் விரக்தி ஏற்பட்டதால் மண விலக்குப் பெறும் எண்ணம் மேலோங்குதல்

**கடகம்**
ஆலய பரிபாலன சபைகளில் பதவிக்கு நியமிக்கப்படல்

**சிம்மம்**
விலங்கொன்று குறுக்கே வந்த வேளை விபத்தேற்படல்

**கன்னி**
மூத்த சகோதரனின் கருணையால் வசந்த காலம் பிறத்தல்

**துலாம்**
துணையின்றித் தனித்துச் சென்ற வேளை திருடரால் தொல்லை நிகழ்தல்

**விருச்சிகம்**
சட்ட விரோதமான பொருட்களைக் கொண்டு வந்தவேளை பிழபடல்

**தனுசு**
பரீட்சைச்சித்தியினால் வெளியூர் மகனிடம் செல்ல ஆயத்தமாதல்

**மகரம்**
விளையாட்டுத்துறையில் சாதனை புரிய பயிற்சியில் ஈடுபட முனைதல்

**கும்பம்**
புதிய யுக்தி முறையினைக் கையாண்டதால் வியாபாரம் களை கட்டல்

**மீனம்**
பழைய எதிரியைச் சந்திக்க நேர்ந்ததால் பதகளிப்பும் அச்சமும் ஏற்படல்

# உலகக்கிண்ண கால்பந்து தகுதிச்சுற்று பங்கேற்கவுள்ள பிளாட்டர்



ரஷ்யா சென் பீட்டர்ஸ்பேக்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள 2018 உலகக கிண்ண கால்பந்து போட்டிகளுக்கான தகுதிச்சுற்று தொடரில் FIFA தலைவர் செப் பிளாட்டர் பங்கேற்பார் என ரஷ்ய விளையாட்டுத்துறை அமைச்சர் விட்டலி முட்கோ நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் சந்திப்பொன்றை மேற்கொள்வதற்கு வருகை தரவுள்ள செப் பிளாட்டர் இந்த தகவலை உறுதிப்படுத்திய தாகவும் விட்டலி முட்கோ தெரிவித்துள்ளார்.


இத தொடர்பில் ரஷ்ய தலைநகரில் செய்தியாளர்களுக்கு தெரிவித்த முட்கோ, ரஷ்யாவிற்கு தான் வருவதை செப்பிளாட்டர் உறுதிப்படுத்தியதாகவும் அவரது பயணத்திற்கான திட்டத்தினை தயார் படுத்துமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் சந்திப்பினை மேற்கொள்வதற்கு பிளாட்டர் கேட்டுக் கொண்டதாக தெரிவித்த முட்கோ, அவரது ரஷ்ய பயணம் தொடர்பில் தாம் இருவரும் கலந்துரையாடியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் விலகினார் செரீனா

முழங்கையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் இருந்து வெளியேறுவதாக செரீனா வில்லியம்ஸ் அறிவித்துள்ளார்.

உலக ரென்னிஸ் தர வரிசையில் முதல் நிலை வீராங்கனையாக திகழ்பவர் செரீனா வில்லியம்ஸ். கடந்த செவ்வாய்க் கிழமை சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின், 16 ஆவது சுற்றுப்போட்டி ஒன்றில் செரீனா வில்லியம்ஸ் விளையாடினார். அப்போது அவரது முழங்கையில் காயம் ஏற்பட்டது.



இதன் விளைவாக சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் இருந்து வெளியேறுவதாக செரீனா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

பந்தை அடிக்க முயன்ற போது எனக்கு காயம் ஏற்பட்டது. மருத்துவர்களின் அறிவுரையின் காரணமாக சுவீடன் ஓப்பனில் இருந்து வெளியேறுகிறேன் என்றார்.

ஆறுமுறை விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்று உலகின் முதல் நிலை வீராங்கனையாக திகழ்ந்து வரும் செரீனா, சுவீடன் ஓப்பனில் இருந்து வெளியேறி இருப்பது அவரது இரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இங்கிலாந்து அணிக்கு பின்னடைவை ஏற்படுத்துவோம்

## கிறிஸ்ரொஜர்ஸ் கூளுரை



ஆஷஷ் தொடரின் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு பின்னடைவை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அவுஸ்ரேலிய அணி வீரர் கிறிஸ் ரொஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

இறுதியாக நடைபெற்ற ஆஷஷ் தொடரை 5 இற்கு 0 என்ற ஆட்டக்கணக்கில் அவுஸ்ரேலியா வெற்றிகொண்ட போதிலும தற்போது நடைபெற்று வரும் ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியில் 169 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா தோல்வி கண்டிருந்ததது.

இந்த கடுமையான தோல்வியே தம்மை மீண்டும் திறமையை வெளிப்படுத்த தூண்டியதாக கிறிஸ் ரொஜர்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

லோட்ஸ்சில் நேற்று முன் தினம் ஆரம்பமான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது விக்கெட்டுக்காக ஸ்ரிவன் ஸ்மித்துடன் இணைந்து பிரிக்கப்படாத 258 ஓட்டங்களை கிறிஸ் ரொஜர்ஸ் பகிர்ந்திருந்தார்.

கிறிஸ் ரொஜர்ஸ் 158 ஓட்டங்களையும் ஸ்ரிவன் ஸ்மித் 129 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

இதேவேளை இங்கிலாந்து அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ட்வர் பேலிஸ்சின் தந்திரோபயங்கள் குறித்து அவுஸ்ரேலிய அணியின் இளம் வீரர் ஸ்ரிவன் ஸ்மித் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்டெயார் குக்கின் களத்தடுப்பு வியூகங்கள் குறித்து ஆச்சரியமடைவதாகவும் அவர் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

# இளம்வீரர்களின் செயற்பாடே 2 ஆவது போட்டி வெல்லக்காரணம்

## மத்தியூஸ் பாராட்டு



பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச போட்டியின் போது இலங்கை அணியின் இளம் வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டதாக இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக் கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களினால் த்ரில் வெற்றி பெற்றிருந்தது.

இந்தநிலையிலேயே இலங்கை அணியின் இளம் வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டதாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அணியின் இளம் ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரர் குசால் ஜனித் பெரேராவின் துடுப்பாட்டம் பிரம்மிப்பினை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுபோன்று இளம் அணி வீரர்கள் தொடர்ந்தும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் பட்சத்தில் இலங்கை அணி உலகின் தலைசிறந்த அணியாக உருவெடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# ஐ.சி.சி.தரவரிசை ஆஸி.முதலிடத்தில்

International Cricket Council

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள ஒருநாள் அணிக்கான தரவரிசைப்பட்டியலில் தொடர்ந்தும் அவுஸ்ரேலியா முதலிடத்தில் உள்ளது.

இதேவேளை சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை 3-0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியதனால் தொடர்ந்தும் 2 ஆவது இடத்திலேயே நீடிக்கிறது.

இதன்படி முதல் இடத்தில் அவுஸ்ரேலியா 129, 2 ஆவது இடத்தில் இந்தியா 115, 3ஆவது இடத்தில் நியூசிலாந்து (112), 4ஆவது இடத்தில் தென் ஆபிரிக்கா (109), 5ஆவது இடத்தில், இலங்கை (105) உள்ளன. 6 முதல் 10 இடங்கள்

வரை முறையே இங்கிலாந்து, வங்காளதேசம், மேற்கிந்திய தீவுகள் பாகிஸ் தான், அயர்லாந்து ஆகிய அணிகள் உள்ளன.

# பீபா அதிகாரியொருவரை நாடுகடத்தியது சுவிஸ்




தமது நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளத்தின் அதிகாரியொருவர் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக சுவிட்ஸர்லாந்து அறிவித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்களில் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ள பீபா அதிகாரிகளில் நாடு கடத்தப்பட்ட குறித்த நபரின் பெயர் வெளியிடப்படவில்லை.

மூவர் அடங்கிய பொலிஸ் குழுவொன்று அவரை நியூயோர்க்கிற்கு அழைத்துச் சென்றுள்ளதாக சுவிஸின் நீதித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் நாடு கடத்தும் கோரிக்கையை பீபா அதிகாரியான ஜெப்ரி வெப் சவாலுக்கு உட்படுத்திய போதிலும் அதனை சுவிஸ் அதிகாரிகள் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

50 வயதான வெப் மத்திய மற்றும் வடஅமெரிக்க கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவராகவும் பீபாவின் உப தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

சந்தைப்படுத்தல் உரிமைகளின் விற்பனையில் மில்லியன் கணக்கான டொலர் இலஞ்சம் பெற்றதாக அவருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

FIFA

## ஆஸி, இங்கிலாந்திற்கு எதிரான

# தொடரை வென்றதன் பின்பே ஓய்வு என்கிறார் யுனிஸ்



(லாகூர்)

அவுஸ்ரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான தொடரை வென்ற பிறகே ஓய்வு பெறவுள்ளதாக பாகிஸ்தான் அணியின் யுனிஸ்கான் தெரிவித்துள்ளார்.


37 வயதாகும் யுனிஸ்கான் தனது ஓய்வு பற்றி கூறியதாவது:-

இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவை வீழ்த்தினால் பாகிஸ்தான் சிறந்த அணியாக மாறும். அவுஸ்ரேலியாவிற்கு எதிராக நான் இதுவரை சதம் அடித்தது கிடையாது. எனது ஓய்வுக்கு முன் அந்த இலக்கை எட்ட விரும்புகிறேன். நான் என்னுடைய பாணியில் செல்கிறேன். அவுஸ்ரேலியா மற்றும் இங்கிலாந்து அணிக்கு எதிராக பாகிஸ்தான் வெற்றி பெற என்னுடைய பங்களிப்பை அளிக்க விரும்புகி[illegible]றார்.

பாகிஸ்தான் க[illegible]ந்த 1996 ஆம் ஆண்டு இங்கிலாந்து மண்ணில் தொடரை வென்றது. ஆனால், இதுவரை அவுஸ்ரேலிய மண்ணில் பாகிஸ்தான் ஒரு தொடரைக்கூட வென்றது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

30 சதம் அடித்துள்ள யூனிஸ்கான் சேசிங்கின்போது ஐந்து சதம் அடித்து சாதனை படைத்துள்ளார். இன்னும் 19 ரன்கள் எடுத்தால், மியான்டட் எடுத்த 8832 ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடிப்பார்.

# பாவலன் சிறுகுறிப்பு



அண்மைக்காலமாக சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் மரணமடைந்து வருகின்றமை விளையாட்டு இரசிகர்கள் மத்தியில் மிகுந்த வேதனையினை ஏற்படுத்தி உள்ளது. அந்த வகையில் கடந்த 05.07.2015 ஞாயிற்றுக்கிழமையும் விளையாட்டு வீரன் ஒருவன் இங்கிலாந்தில் மரணமானான். கிரிக்கெட் ஆட்டத்தின் போது அவனது மார்பில் பந்து தாக்கியதில் மரணமானவன் பத்மநாதன் பாவலன் (வயது-24) என்பவராவார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப்பகுதியிலேயே இவன் பிறந்து வளர்ந்து வந்தான். இவனது தந்தையார் பத்மநாதன் ஒரு கிராம அலுவலர் தாயார் பரமேஸ்வரி மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர் தந்தையர் பாவலனுக்கு 6 வயதிலேயே இயற்கை எய்தினார். பாவலன் ஆரம்பக் கல்வியை சோரன்பற்று சி.சி. த.க.பாடசாலையில் கற்றுவந்தான். 2000 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலை அடுத்து பாவலன் குடும்பமும் இடம் பெயர்ந்து பருத்தித்துறைக்கு வந்தது ஒராம்கட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் குடியமர்ந்தனர்.

பின்னர் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மீண்டும் கல்வியை சிலகாலம் தொடர்ந்த பாவலன் புலமைப் பரிசில் பரீட்சைக்கும் தோற்றி சித்தி எய்தினார். அங்கும் சிறந்த மாணவனாக காணப்பட்டான்.

அதன்பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தான். மாணவத்தலைவனாகவும் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் இல்லத் தலைவனாகவும் விளங்கிய அவன் பாடசாலை கிரிக்கெட் அணியிலும் சதுரங்க அணியிலும் பங்குபற்றி பாடசாலைக்கு பெரு வெற்றியை ஈட்டிக்கொடுத்தான்.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தி எய்தி உயர்தரத்தில் உயிரியல் பாடநெறியைத் தெரிவு செய்து கற்றுவந்த அவன் உயிரியல் பாடத்தில் சித்தி பெற்ற வேளையில் அவனுக்கு இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்பதற்காக மாணவர் விசா கிடைக்கப்பெற்றது.

2010 ஆம் ஆண்டு மாணவர் விசா மூலம் பாவலன் லண்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றிற்கு சென்று அங்கு மூன்று வருட பட்டப்படிப்பை முடித்தான்.

பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பாவலன் லண்டனில் உள்ள மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியில் ஒருவருட காலமாக விளையாடி வந்தார்.


வழமைபோன்று கடந்த 5 ஆம் திகதி லண்டனில் உள்ள சர்ரே எனும் பகுதியில் ரீகிரியேஷன் மைதானத்தில் கிரிக்கெட் ஆட்டம் ஒன்று ஏற்பாடாகியிருந்தது. பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனம் நடாத்திய இக்கிரிக்கெட் போட்டியில் இவன் விளையாடிய போது எதிரணியினர் வீசிய பந்து இவனது மார்பில் தாக்கியதில் பாவலக பரிதாபகரமாக உயரிழந்தான்.

பருத்தித்துறையில் உள்ள அவ்னது இல்லத்திற்கு எடுத்து வரப்படவுள்ள பூதவுடலுக்கு வடமராட்சி மாணவர் சமுதாயம் இறுதி அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

— — — — — — — — —

■ தொகுப்பு-கு.மகாலிங்கம்

# வடக்கின் முதல்வன்



(மன்னார்)

வடமாகாண கல்வித்திணைக் களத்தினால் வவுனியாவில் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாவில் தட, கள போட்டிகளில் அதி சிறந்த ஆண் மெய்வல்லுநராக மன்னார் முத்தாப்புத்துறையைச் சேர்ந்த சு.சகாய றினோசன் லெம்பட் (858 புள்ளிகள்) தெரிவானார்.

19வயதிற்குட்பட்ட தடை தாண்டல் 400 மீற்றர், 110 மீற்றர் அத்தோடு 200 மீற்றர் ஓட்ட நிகழ்வுகளில் முதலிடங்களை பெற்று தங்கப்பதக்கங்களை கைப்பற்றினார்.

தடைதாண்டல் முன்னைய சாதனை 110மீற்றர் 16.50 செக்கன்கள். புதிய சாதனை 15.90 செக்கன்கள், 400 மீற்றர், 59.20 மீற்றர் புதிய சாதனை 57.20 செக்கன்கள் ,200 மீற்றர் ஓட்டம் முன்னய சாதனை 24.10 செக்கன்களில் புதிய சாதனை 22.50 செக்கன்கள் அனைத்திலும் புதிய சாதனை படைத்துள்ளார்.

# கிரிக்கெட் சுற்றுத்தொடர்

(யாழ்ப்பாணம்)

மகாமணி வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடர் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது. தீவகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இச்சுற்றுத்தொடர் இரு தினமும் காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது.

புளியங்கூடல் மகாமணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இக் கிரிக்கெட் சுற்றுத் தொடர் இடம்பெறவுள்ளது.

விளையாட்டு செய்திகள்

# கோப்பாய் பிரதேச இளைஞர்கழக விளையாட்டுப் போட்டி நிகழ்வு



யாழ். கோப்பாய் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் சம்பியன் வெற்றிக்கிண்ணப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை. சயூட்டன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினரான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சம்மேளன வடபிராந்திய இயக்குநர் தவேந்திரன், சமன்ஜய சிங்க (பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், அச்சுவேலி), சண்முகவடிவேலு (இளைஞர் உத்தியோகத்தர், யாழ். மாவட்டம்), விஜிதரன் (உபதலைவர், இலங்கை இளைஞர் சம்மேளன உப தலைவர்), அனுஷன் (கிராம உத்தியோகத்தர்), கோபாலதாஸ் (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி இறுதிநாள் சம்பியன் வெற்றிக் கிண்ணப் போட்டிகளாக ஆவரங்கால் கிழக்கு மற்றும் புத்தூர் வடக்கு அணிகளின் பெண்களுக்கான கயிறிழுத்தல் மற்றும் ஆண்களுக்கான உதைபந்தாட்டம் ஆகியன இடம் பெற்றன.

மேற்படி கயிறிழுத்தல் மற்றும் உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகள் இரண்டிலும் ஆவரங்கால் கிழக்கு அணியினர் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றதுடன், அவர்கள் மாவட்ட ரீதியிலான போட்டிக்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில்களை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்த விருந்தினர்கள் வழங்கிவைத்தார்கள்.

# கவுண்டி போட்டியில் சதம் விளாசிய சங்கா



சங்கக்கரா இங்கிலாந்தில் கவுண்டி போட்டியில் விளையாடி வருகிறார். சர்ரே அணிக்காக விளையாடி வரும் அவர், முதல் தர போட்டியில் 53ஆவது சதத்தை அடித்தார்.

கென்ட்- சர்ரே அணிகளுக்கு இடையிலான 4 நாள் கவுண்டி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கடந்த 13ஆம்திகதி தொடங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த கென்ட் அணி முதல் இன்னிங்சில் 336 ரன்கள் குவித்தது. பின்னர் சர்ரே அணி முதல் இன்னிங்சை தொடங்கியது.

இதில் 3ஆவது நபராக களம் இறங்கிய சங்கக்கரா 183 பந்தில் 110 ரன்கள் குவித்து அவுட் ஆனார். இது அவரது 53ஆவது முதல் தர போட்டி சதமாகும். இவரது சதத்தால் சர்ரே அணி 311 ரன்கள் எடுத்தது. 25 ரன்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய கென்ட் 99 ரன்களில் சுருண்டது.

125 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சர்ரே அணி விளையாடியது. இதில் சங்கக்கரா 1 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

# ராஜபக்ஷவின் மீள்வருகை

**mydigitalfc.com இணையத்தளத்தில் சுபா சிங் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.**

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கை அரசியலில் பாரிய தொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. அதாவது பத்து ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷ கடந்த தேர்தலில் தோற்கடிக்கப் பட்டார். ஆனால் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இவர் மீண்டும் போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டமையானது இலங்கை அரசியலில் திருப்பம் ஒன்று ஏற்படுவதற்கான அறிகுறி யாகும்.

செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலை யில் இதற்கு முன்னதாக நாடாளு மன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதே இலங்கை அரசியற் தலைமையின் நோக்காகும்.

இந்தவகையிலேயே நாடாளு மன்றத் தேர்தலை அவசர அவசர மாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையானது இலங் கையில் இடம்பெற்ற யுத்தத் திற்குத் தமது ஆதரவை வழங்கிய சிங்களப் பெரும் பான்மை சமூகத்தின் மத்தியில் அதிருப்தியை உண்டுபண்ணும். அத்துடன் சிங்கள சமூகத்தவர் களின் இந்த நிலைப்பாடானது இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிச்சக்திகளின் தலையீடு இடம்பெறக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்த ராஜபக்சவின் கருத்திற்கு மேலும் பலம் சேர்க்கும்.

ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிர- தமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் நாடாளுமன்றத்தில் அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கான பலமான உந்துதலை வழங்கக் கூடிய நிலையிலில்லை.

விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியானது தற்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றில் 225 மொத்த ஆசனங் களில் 40 ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்தது. ஆனால் ராஜபக்ஷவின் விசுவாசிகள் இந்த நாடாளுமன்றில் பலமான ஒரு இடத்திலிருந்தனர்.

சிறிசேனவால் தலைமை தாங்கப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ராஜபக்ஷ போட்டி யிடுவார் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அதாவது ராஜபக்ஷவிற்கு வேட்பாளர் நியமனத்தை வழங்க மறுப்பதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் சிறி சேன உறுதியாக இருந்தார். இதனா- லேயே இவர் தற்போது ராஜபக்ஷவுக்கு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

"வானவில் கூட்டணி" என அழைக்கப்படும் எதிரணியின் கூட்டுக்கட்சி ஒன்றின் மூலமே சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கினார். இதன்போது ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படமாட்டாது என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனாலும் இதனை சிறிசேன மீறிவிட்டதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

இலங்கையில் கடந்த ஆறு மாத காலமாகச் செயற்பட்ட சிறிசேன - ரணில் கூட்டு அரசாங்கத்தை இந்தியா வரவேற்றிருந்தது. தமிழர்களுடன் அரசி யல் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு இந்தியா, ராஜபக்ஷ மீது அழுத்தம் கொடுத்த போதிலும் அதனை ராஜபக்ஷ இறுதி வரை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில் ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வியானது இந்தியாவுக்கு சாதகமான ஒரு வாய்ப்பை வழங்கியது.


இதனால் சிறிசேன-ரணில் அரசாங் கத்தை இந்தியா வரவேற்றது. இந்தியா வைப் புறக்கணித்த ராஜபக்ஷ சீனா வைத் தனது நெருங்கிய அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டாளியாக இணைத்துக் கொண்டார்.

சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி யேற்றுக் கொண்டதன் பின்னான காலப்பகுதியில் இந்திய-சிறிலங்கா உறவு மீண்டும் நெருக்கமடைந்துள்ளது. கடந்த ஆறு மாத காலப்பகுதியில் இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிர- தமர் நரேந்திர மோடி, இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் தமது சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியா மற்றும் சீனாவுடன் சிறிசேன அரசாங்கம் ஒரு நடுநிலை யான உறவுநிலையை மீளவும் உரு வாக்குவதற்காக எடுத்துக் கொண்ட நகர்வுகள் இந்தியாவிற்கு பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

எனினும், இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற் கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையகத்தில் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். இலங்கையின் முக்கிய அரசியற் தலைவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதில் தான் ஆர்வமாக உள்ளதாக மோடி தெரிவித்திருந்தார்.

இதேபோன்று, பங்களாதேசின் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஸியாவை யும் மோடி தனது



டாக்காவுக்கான பயணத்தின் போது சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். இந்தியா தனது அயல்நாடுகளான நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு போன்ற நாடுகளின் அரசியற் சக்தி களுடன் பரந்தளவிலான உறவைப் பேண வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.

இந்த வகையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியுடனும் பங்களாதேசின் முன்னாள் பிரத மருடனும் மோடி சந்திப்புக்களை மேற்கொண்டதானது நல்லதொரு நகர்வாகவே நோக்கப்படுகிறது.

# சின்னச் சின்ன....

## 55 வருடங்களின் பின்னர்



55 ஆண்டுகளுக்கு முன்னர் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றொரு படம் . வெளியானது. அந்தப் படத்தில் இலங்கைப் பாடகரான ஈழத்து இரத்தினம் எழுதிய பாடல் ஒன்று இடம் பெற்றது. அதுதான் இலங்கையர் ஒருவர் தமிழகத் திரைப்படம் ஒன்றுக்கு எழுதிய முதல் பாடல். அதன் பின்னர் இப்பொழுதுதான் ஒரு இலங் கையர் தமிழகத் திரைப்படங் களுக்குப் பாடல் எழுத வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. கிழக்கு மாகாணத்திலுள்ள பொத்துவில் கிராமத்தைச் சேர்ந்த அஸ்மின் என்ற இளைஞர் சென்னை கோலிவுட்டைத் தன் பாடல்களால் தற்பொழுது கலக்கத் தொடங்கியிருக்கிறார். ஆனா லும் அவரும் இலங்கை மண்ணின் மைந்தரா எனச் சிலர் ஐயம் எழுப்பியிருக்கின்றனர். காரணம் அவரது முப்பாட்டனார் இராமநாதபுரம் தேவிபட்டினத்தைச் சேர்ந்தவர் என்றும், வறுமை காரணமாக இலங்கையில் குடியேறியவர் என்றும் தகவல் வெளியாகி இருப்பதுதான்.

## எனக்குத்தான் நஷ்டம்



ஆர்தர் கொனன் டொயில் எழுதிய நாடகம் ஒன்றில் நடித்து வந்த இளம் நடிகர், ஒருநாள் டொயிலிடம், "நம் இருவரு- டைய வருமானத்தையும் இரண்டாகப் பங்கிட்டு ஒரு பங்கை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டால் என்ன?" என்று கேட்டார்.

"முடியாது. இதில் எனக்குத்தான் நஷ்டம்" என்று மறுத்துவிட்டார் டொயில்.

அந்த நாடக நடிகரின் சம்பளம் வாரத்துக்கு மூன்று பவுண்தான். ஆனால், அதே நாடக நடிகர் பின்னாளில் கோடிக்கணக்கில் சம்பாதித்து உலகப் புகழும் பெற்றார். அந்த நடிகர் சார்ளி சாப்ளின்.

("உங்களுக்குத் தெரியுமா"? நூலிலிருந்து.)

## ஜெமினி நடித்த கதை!



புதிய டிஜிட்டல் முறை யில் புதுப்பிக்கப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்ட "வீரபாண்டிய கட்டபொம்மன்" பற்றி இரசிகர்கள் அதிகம் கேள்விப்படாத ஒரு செய்தி.

முதலில் வெள்ளையத்தேவன் பாத்திரத்தில் எஸ்.எஸ். ஆர். ஒப்பந்தமாகி ஓரிரு காட்சிகள் நடித்திருந்த நேரத்தில், அவருக்கும் சிவாஜிக்கும் மன வேற்றுமை உருவாகி, கட்டபொம்மன் குழுவினர் வெளிப்புறப் படப்பிடிப்புக்காக ஜெய்ப்பூர் சென்ற நேரத்தில், எஸ்.எஸ்.ஆர் நடிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். அவ்வளவு தூரம் சென்ற படப்பிடிப்புக் குழு மற்றும் தயாரிப்பாளர் பி.ஆர். பந்துலுவுக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் அதிர்ச்சிச் சூழல்.

சிவாஜி உடனே ஜெமினியைத் தொலைபேசியில் அழைத்து, "எஸ்.எஸ்.ஆர்-ஐ எப்படியாயினும் சமாதா- னம் செய்து ஜெய்ப்பூர் வர ஏற்பாடு செய்" என்று கேட்டுக் கொண்டார்.

(ஜெமினி - சிவாஜிக்கு இடையே அன்று வாடா போடா என்று நல்ல நட்பு இருந்தது).

ஜெமினி சமாதானத்தை ஏற்காத எஸ்.எஸ்.ஆர், "வேண்டுமானால் நீங்களே அந்தப் பாத்திரத்தில் நடித்து அவர்கள் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். அந்தப் பாத்திரத்தை உங்களாலும் சிறப்பாகச் செய்ய முடியும்" என்றார்.

"வார்த்தையில் சொன்னால் போதாது, பின்னால் வரும் பல பிரச்சினைகளைச் சமாளிக்க தங்களின் எழுத்து மூலமான சம்மதம் வேண்டும்" என ஜெமினி கேட்க எஸ்.எஸ்.ஆர். கடிதமும் கொடுத்தார்.

சம்பந்தப்பட்டவர்களிடம் அந்தக் கடிதத்தின் நக லைச் சேர்ப்பித்துவிட்டு, பின்பு ஜெய்ப்பூர் சென்றார் ஜெமினி. வெள்ளையத்தேவன் ஆனார்!

## கிழட்டு நடிகன்



சக்கரவர்த்தி திருமகள் படத்தில் நடிக்கும்போது, எம். ஜி.ஆருக்கு வயது, 40 "தமிழ் சினிமா" பத்திரிகையின் ஆசிரி யர் கரீம், தன் பத்திரிகையில், எம்.ஜி.ஆரை, "கிழட்டு நடிகன்" என்று குறிப்பிட்டார்.

அதைப் படித்த எம். ஜி.ஆர்., கோபப்படவில்லை. மாறாக, "கரீம் எழுதியதில் உண்மையுள்ளது. "மனோ- கரன்" நாடகத்தில், மனோகரனாக, பம்மல் சம்பந்த முதலியார் நடிப்பார். அந்த நாடகத்தில், நானும் சிறிய வேடத்தில் நடிப்பேன். ஒரு காட்சியில், "அம்மா... இந்த, 16 வயது பாலகனைப் போருக்கு அனுப்புங்கள் வென்று வருகிறேன்..." என்பார். அப்போது அவருக்கு வயது, 40. "துணிந்து பொய் சொல்கிறாரே..." என்று நினைப்பேன். அதை மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அதனால், கரீம் கவலைப்பட வேண்டாம்..." என்றார்.

("கலை. உலக சக்ரவர்த்திகள்" நூலிலிருந்து)

## ஹேமாவும் ரேகாவும்

இன்று ஹிந்தியில் பிரபலமாக இருக்கும் நடிகை ரேகாவும், ஹேமமாலினியும் ஆரம்பத்தில் தமிழ்ப் படத்தில் ஓரிரு காட்சியில் நடித்தவர்கள். பிறகே ஹிந்தி சென்றவர்கள்.

ரேகா "நல்ல முடிவு" படத்தில் முத்துராமனோடு நடித்தார். பின்பு படத்தில் ரேகா நடித்த காட்சிகள் நீக்கப்பட்டு அந்தப் பாத்திரத்தில் வேறு நடிகை நடிக்க ஆரம்பித்தார்.

# மைத்திரியின் திட்டம்?

- யூ.எல்.மப்றூக் கட்டுரையிலிருந்து.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைவராகப் பதவி வகிக்கும், ஐ.ம.சு.கூட்டமைப்பிலேயே, மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரின் விசுவாசிகளுக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கப்பட்டிருப்பதானது, நல்லாட்சி ரசிகர்களின் மனதில் பேரிடியை இறக்கி விட்டிருக்கிறது.

இதனால், ஆறு மாதங்களுக்கு முன்னர் இலங்கை அரசியலில் "வானத்திலிருந்து இறங்கிய ஒரு மீட்பர்" போல் பார்க்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று ஒரு சிலருக்கு துரோகியாகி விடுவார் போல் தெரிகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தோற்றவுடன், அவரின் ஆட்டம் முடிந்தது என்றுதான், அவருக்கு எதிரானவர்கள் அனைவரும் நினைத்திருந்தனர். பின்னர், பொதுத் தேர்தலொன்று நடைபெறுமாயின் மஹிந்த ராஜபக்ஷ, அந்தத் தேர்தலில் போட்டியிடுவார் என்கிற பேச்சு எழுந்தது.

அப்படித்தான் அவர் போட்டியிட்டாலும், ஏதாவது ஊர் - பெயர் தெரியாததொரு கட்சியில்தான் போட்டியிட வேண்டும், ஜனாதிபதி தல்லைமைப் பதவி வகிக்கும் ஐ.ம.சு.கூட்டமைப்பிலோ அல்லது சுதந்திரக் கட்சியிலோ மஹிந்த தலைகாட்ட முடியாது என்று கூறப்பட்டது. கடைசியில் பார்த்தால், மைத்திரி தலைவராக உள்ள ஐ.ம.சு.கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே மஹிந்த களமிறங்கியுள்ளார்.

அப்படியென்றால், இடையில் - என்னதான் நடந்தது? ஊடகங்களும் ஊர்க் கதைகளுமாக ஆளுக்கொன்றைச் சொல்கின்றன. ஐ.ம.சு.கூட்டமைப்புக்குள்ளும் சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஜனாதிபதி மைத்திரி எதுவும் செய்துகொள்ள முடியாத, கையாலாகாத்தனத்துடன் உள்ளார் என்றும், அந்த நிலையைப் பயன்படுத்தி அவருக்கு அழுத்தம் கொடுத்தே, மஹிந்த தரப்பு, தமக்கான வேட்பாளர் நியமனங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் ஒரு கதை உள்ளது.

இன்னொருபுறம் வேறு கதையொன்றும் உள்ளது. சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரி தலைமையேற்ற பிறகு நடைபெறவுள்ள முதல் தேர்தல் வருகிற பொதுத் தேர்தலாகும். எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில், தான் தலைமை வகிக்கின்ற கட்சியும், கூட்டணியும் வெற்றிபெற வேண்டும். அப்படி வெற்றி பெற்றால்தான், மைத்திரியின் கட்சித் தலைமைப் பதவியினைப் பாதுகாத்துக்கொ[illegible]யும். அதனால்தான், ம[illegible]தவும் அவரின் கூட்டாளிகளும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு மைத்திரி ஒத்துக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இவை அனைத்துக்கும் மாற்றமான வேறொரு கதையொன்றும் உலவுகிறது. அதாவது, இப்போது எதுவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றனவோ, அவை அனைத்தும் - மைத்திரி மற்றும் அவரின் சகாக்களின் திட்டத்தின் அடிப்படையிலானவையாக இருக்கக் கூடுமென்றும் கூறப்படுகிறது.

வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கேட்டு பிரச்சினைகளை ஏற்படுத்திய மஹிந்தவுக்கும் அவரின் குழுவினருக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குவது. பின்னர், ஐ.ம.சு.கூட்டமைப்பு மற்றும் சுதந்திரக் கட்சியிலுள்ள மைத்திரியின் சகாக்கள், ஐ.தே.க. பக்கம் கழன்று செல்வது.

இதனையடுத்து, ஐ.ம.சு.கூட்டமைப்புக்குள் மஹிந்த மற்றும் அவரின் குழுவினரை தனிமைப்படுத்துவது. பின்னர், ஐ.ம.சு.கூட்டமைப்பும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்வரும் தேர்தலில் பெற்றுக் கொள்ளும் நட்டங்கள் அனைத்தினையும் மஹிந்தவின் தலையில் போட்டு, அவரை நாறடிப்பது. இந்தத் திட்டத்தின்படிதான் இப்போது நடக்கும் எல்லாவற்றினையும் மைத்திரி அணி நகர்த்திக் கொண்டிருப்பதாகவும் ஓர் அனுமானம் இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பிறகு விடுத்த அறிக்கைகள் மறக்க முடியாதவை.

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றிருந்தால், தன்னையும் தன் குடும்பத்தையும் மஹிந்த ராஜபக்ஷ மண்ணுக்குள் புதைத்திருப்பார் என்று மைத்திரி தெரிவித்திருந்தார். அந்தளவு தனக்கு கொடுமை செய்கின்ற மனநிலையிலுள்ள ஒருவருக்கு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தினை மைத்திரிபால சிறிசேன வழங்கியிருக்கின்றார் என்றால், அதற்கு பின்னால் "வெற்று"க் காரணங்கள் இருக்க முடியுமென்று நினைக்கிறீர்களா?

ஆக, ஐ.ம.சு.கூட்டமைப்பில் மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கியது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, கோபித்துக்கொண்டு லண்டன் சென்றது. ராஜித்த மற்றும் சம்பிக்க குழுவினர் ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது என்று, எல்லாமே, ஆம் எல்லாமேதான். மைத்திரி அணியின் மிகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாக இருக்கும் என்கிற நிகழ்தகவுக்கான சாத்தியங்கள் இல்லாமலுமில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்தவும் அவரின் அணியினரும், ஆட்சியொன்றினை அமைக்கும் பலத்துடன் வெல்லப் போவதில்லை என்பதுதான் பலரின் வாதமாக உள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதை மிக இலகுவாக விளக்கிச் சொன்னார்.

மிகப்பெரும் அரசியல் அதிகாரத்துடனும் பெருமளவு பணம் புகழுடனும் இருந்தபோது, தன்னுடைய ஜனாதிபதித் தேர்தலிலேயே வெற்றிபெற முடியாத மஹிந்த ராஜபக்ஷ, மேற்படி அனைத்தையும் இழந்த நிலையில், ஆட்சியினையொன்றும் பிடிக்க முடியாது என்றார். இது தட்டிக்கழிக்க முடியாத வாதமாகும்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ - பொதுத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம், முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கப்படும் சலுகைகள் அனைத்தினையும் இழந்து விடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். மேலும், எதிர்வரும் நாடாளுமன்றில் மஹிந்த தரப்பினரால் ஆட்சியொன்றினை அமைக்க முடியாது போகும் பட்சத்தில், சாதாரணமானதொரு உறுப்பினராகத்தான் நாடாளுமன்றுக்குள் அவர் சென்று - வர வேண்டியிருக்கும்.

இப்படியெல்லாம் நடந்தால், அது, பார்ப்பதற்கு மிகவும் பரிதாபகரமானதொரு நிலையாகவே அமையும். அதற்கு அவரைத் தவிர வேறு யார் பொறுப்பாக முடியும்?! அப்போது வேண்டுமானால், ஏன் இதற்குள் இறங்கினோம் என்று, மஹிந்த ராஜபக்ஷ, தனது மீள் வருகை குறித்து கவலைப் படக் கூடும். அதுவரையில், இந்த அரசியல் ஆட்டத்தின் சூடு தணியப்போவதில்லை!

---



விஜயன் முதன்முதலாக இயக்கிய "காவல் தெய்வம்" படத்தில் ஒரு காட்சியில் ஹேமமாலினி, நடிகை சரளாவோடு சேர்ந்து நடனமாடிவிட்டுச் செல்வார். "இது சத்தியம்" படத்திலும் ஹேமமாலினி ஒரு நடனக்காட்சியில் மட்டும் தோன்றியுள்ளார்.

★ அவ்வை சண்முகம் குழுவினரின் "மனிதன்" என்றொரு நாடகம். இராணுவத்தில் பணிபுரியச் சென்றிருப்பவனின் மனைவியுடன் அவன் நண்பன் உறவு கொண்டுவிடுகிறான். நண்பனின் பாத்திரத்தில் நடித்த டி.கே.சண்முகத்தின் மேல் ரசிகர் ஒருவர் செருப்பை வீசி எறிந்தார். தன் நடிப்புக்கு கிடைத்த பரிசு இது என்று டி.கே.சண்முகம் இறக்கும் வரை அதை வைத்திருந்தார்.

★ காஞ்சிபுரம் தனக்கோட்டி அம்மாள் அந்தக் காலத்தில் கொடிகட்டிப் பறந்த பாடகி. ஒரு கச்சேரியின்போது, கூட்டத்தில் இருந்த ஒருவன் "தனக்கோடி - ஒரு இராமாயணக் கிருதி பாடு" என்று ஒருமையில் பேசினான். உடனே தனக்கோட்டி அம்மாள், "யாரடா குரங்கே" என்று தொடங்கும் ராம கீர்த்தனையைப் பாடிப் பதிலடி கொடுத்தாராம்.

இளைஞன் கப்சிப்!


★ நல்லதங்காள் திரைப்படம் மலையாளத்தில் வெளியானபோது பிரபல பாடகர் ஜேசுதாசின் தந்தை அகஸ்டின் ஜோசப் அதில் கதாநாயகனாக நடித்தார்.

★ "மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ" என்னும் குலேபகாவலியில் இடம்பெற்ற இனிமையான பாடல் "கூண்டுக்கிளி" படத்திற்காக எழுதப்பட்டு, பின்னர் "குலேபகாவலி"யில் இடம்பெற்றது.

★ காலஞ்சென்ற நடிகை டி.ஆர். ராஜகுமாரி நன்றாகப் பாடக்கூடியவர். "சந்திரலேகா" திரைப்படத்தில் அவர் பாடிய "நந்தபாலன் கருணை புரிவாய்" என்னும் பாடல் அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமானது.

---

# காய்கறி வாங்குவது எப்படி?



**உருளைக்கிழங்கு:** உருளைக்கிழங்கின் மேல் தோலை லேசாகச் சீவியவுடன் கெட்டியாகவும் பளபளப்புடனும் பளிச்சென்று இருக்க வேண்டும். பெரிய கிழங்கே நல்லது. உருளைக்கிழங்கை அமுக்கினால் அமுங்கக் கூடாது. இறுகலாக இருக்க வேண்டும்.

**கரட்:** கரட் இலைகளுடன் சேர்ந்திருக்கிற புதிய கரட்டுகளையே வாங்க வேண்டும். கரட் நல்ல நிறத்துடனும் நல்ல வடிவத்துடனும் பளபளப்பாக இருக்க வேண்டும். மெல்லிதாகவும் நீர்ப்பிடிப்புடன் கனமாகவும் இருக்க வேண்டும். பருமனான முற்றிய கரட்டுகள் மரம் போன்று வளைந்து கொடுக்காத தன்மையுடன் சமைப்பதற்கு உபயோகமற்று இருக்கும்.

**கோலிஃபிளவர்:** கோலி ஃபிளவர் ஓரத்தில் இலைகளுடன் நடுவில் பூக்களுடன் இருக்க வேண்டும். புதிதாகவும், அடர்த்தியாகவும், நெருக்கமாகவும் இருக்க வேண்டும். நல்ல வெண்மையாக இருக்க வேண்டும். மஞ்சள் நிறமாகவும் ஆங்காங்கே புள்ளிபுள்ளியாகக கறைகள் தென்பட்டால் அதை வாங்க வேண்டாம். அதனுள்ளே புழுக்கள் இருக்கும்.

**பீட்ரூட்:** பீட்ரூட்டை மிகவும் பெரிய சைஸில் வாங்கக் கூடாது. சிறிய சைஸில் இருக்கும் பீட்ரூட்டில் அதிக சத்தும் அதிக ருசியும் அடங்கியிருக்கும். பீட்ரூட்டை அரிந்தால் உள்ளே நல்ல சிவப்பு நிறமாக இருக்க வேண்டும்.

**முட்டைக்கோஸ்:** முட்டைக்கோஸ் இலைகள் ஒன்றோடொன்று நெருக்கமாக அடர்த்தியாக கனமாக பச்சைப்பசேலென்ற நிறத்துடனும் இருக்க வேண்டும். கோஸ் கெட்டியாக இருக்க வேண்டும்.

# புதிர்ப்போட்டி இல. 47

01 தொடக்கம் 06வரையான வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை

- A தொடக்கம் E வரையான ஆங்கில எழுத்துக்கள் அலுவலகமொன்றின் தளங்களை குறிப்பன
- பெயர்கள் அலுவலக ஊழியர்களின் பெயர்களை குறிப்பன
- அலுவலக தளங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் பெயரானது கிடையாகவோ நிலைக்குத்தாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட தடவை தரப்படவில்லை

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| ரேவதி | ரூபி | ரூபி | வதனா | கலா |
| கலா | வதனா | கலா | ரேவதி | வதனா |
| ரூபி | மலர் | கலா | கலா | கலா |
| ரேவதி | மலர் | வதனா | ரூபி | ரூபி |
| வதனா | கலா | ரேவதி | ரூபி | மலர் |
| வதனா | ரூபி | ரேவதி | வதனா | வதனா |

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக

1. தளம் A யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
2. தளம் B யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
3. தளம் C யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
4. தளம் D யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
5. தளம் E யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
6. தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் பரீட்சைக்காக முதல் தடவையில் தோற்றும் பரீட்சார்த்திகள் பயிற்சி நெறியின் முழுக்கல்விக் காலவெல்லைக்கும் பயிற்சிநெறி நடை பெறும் நாட்களின் எண்ணிக்கையில் 80% அளவிற்கேனும் வருதல் வேண்டும் மாணவர்கள் 80% நாட்களுக்கு வராமையால் அவர்கள் பரீட்சைக்குத் தோற்ற இயலாமையைத் தவிர்ப்பதற்காக ஓர் குறித்த தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் பயிற்சிநெறி நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையாகிய 400 இல் 300 நாட்களின் இறுதியில் ஒவ்வொரு மாணவனும் பயிற்சி நிறுவனத்திற்கு வந்த நாட்களின் சதவீதத்தை கணித்து ஒவ்வொரு மாணவனுக்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்க தீர்மானிக்கப்பட்டது அதன் போது நிமால் பயிற்சி நிறுவனத்திற்கு வந்த நாட்களின் சதவீதம் 75% மாக இருக்கக் காணப்பட்டது 400 எனும் மொத்த நாட்களின் இறுதியில் 80% வரவு தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இறுதி 100 நாட்களில் எத்தனை நாட்களுக்கு நிமால் பயிற்சி நிறுவனத்திற்கு வர வேண்டும்?

7) 4 x 3 = 7, 5x 2 = 7, 6 x 3 = 9 எனின் 3 x 2 x4 இன் பெறுமானம் யாது?

8) 70% நீல மாபிள்களைக் கொண்ட பெட்டி ஒன்றில் சிவப்பு மாபிள்களிலும் பார்க்க 8 நீல மாபிள்கள் அதிகமானதாயின் மொத்த மாபிள்களின் எண்ணிக்கை யாது?

9) கணேஷ் பொருள் ஒன்றை ரூபா 130 இற்கு விற்கும் போது 10% நஷ்டம் அடைகிறார். அவர் 20% லாபம் அடைவதற்கு இப் பொருளை விற்கவேண்டிய விலை யாது?

10) ரஹமான் ஓர் பயணத்தை திட்டமிடுகின்றார். இது மூன்று இணைப்புச் சேவைகளைக் கொண்டது இச்சேவைகளாவன பேருந்து, புகையிரதம், சொகுசு பேருந்து என்பனவாகும் முதல் பேருந்து காலை 8 மணி தொடக்கம் ஒவ்வொரு மணித்தியாலமும் பேருந்து தரிப்பு நிலையத்தில் இருந்து ஆரம்பித்து 2 மணித்தியாலம் 30 நிமிடங்களுக்கு பின்னர் புகையிரத நிலையத்தை அடைகின்றது புகையிரதம் காலை 8 மணி தொடக்கம் ஒவ்வொரு 20 நிமிடமும் புகையிரத நிலையத்தில் இருந்து ஆரம்பித்து 1 மணித்தியாலம் 10 நிமிடங்களுக்கு பின்னர் சொகுசு பேருந்து நிலையத்தினை அடைகின்றது சொகுசு பேருந்து காலை 8.45 மணி தொடக்கம் ஒவ்வொரு மணித்தியாலமும் சொகுசு பேருந்து தரிப்பு நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. எல்லா சேவைகளும் உரிய நேரத்தில் நடைபெறும் எனின் ரஹமான் சேவை நிலையங்களுக்கிடையே செலவிட வேண்டிய மிகக்குறைந்தளவு மொத்த நேரம் யாது?

11) நேராக அமைக்கப்பட்டுள்ள 600மீற்றர் நீளமுள்ள மதிலில் 300 மின்விளக்குகள் சமதூர இடைவெளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அதனை ஒத்த 1200 மீற்றர் நீளமுள்ள 1 மதிலில் எத்தனை மின்விளக்குகள் இருக்கும்?

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்

# சென்றவார விடைகள்

1.(III) 2.(III) 3.(II)

4. (5.00 + (a) - (3.00 + 2a) = 12
 - 3a + 120 = 12
 ∴ a = 36
 ∴ மாலை 5.00 மணிக்கு குறித்த சில நிமிடங்களுக்கு முன்னரான நேரம் = மாலை 4.24
 பி.ப.3.00 மணிக்கு அந்த நிமிடங்களின் இருமடங்கு நிமிடங்களின் பின்னரான நேரம் = பி.ப.4.12
 ஆகவே வித்தியாசம் = 12 நிமிடங்கள்
 எனவே பாலனால் குறிப்பிட்ட குறித்த நிமிடம் = மாலை 4.24

5. 100m ÷ 3m = 33 50m ÷ 3m = 16
 ∴ 33 ±16 = 49 x2 (இரு பக்கங்கள்)
 = 98 +4 (மூலைகள்)
 = 102

6. $2^2$ x 6
 $\sqrt{24}$

7. 2X x X = 64800
 $2x^2$ = 64800
 $x^2$ = 32400
 x = 180
 ஆகவே நீளம் = 360m

8. முந்திய நாள் - சனி
 முந்தைய நாள் - ஞாயிறு
 நேற்று - திங்கள்
 இன்று - செவ்வாய்
 நாளை - புதன்
 நாளை மறுதினம் - வியாழன்
 அடுத்தநாள் - வெள்ளி
 ∴ வெள்ளிக்கிழமை

9. 300% இனால்

10. அரைவட்டத்தின் சுற்றளவு = 1/22πr+ 14
 = 1/2 x2 x22 /7 x7 + 14
 = 36cm

11. வியாழக்கிழமை (லீப் வருட மாகையால் வியாழக்கிழமையாகும்)

12. 50 x 8 = (60 x 5) + (60 x 4) - e
 400 = 300 + 240 - e
 400 = 540 - e
 ∴ ஐந்தாம் எண் = 140

13. ..................... D
 C .......... D
 .........D
 A
 B
 இவ்வாறு D யிற்கு மூன்று சந்தர்ப்பங்களை அளிப்பதன் மூலம் பொருத்தமான வரை இலகுவாகத் தெரிவு செய்யலாம். உ விடையே சரி

14. 1/4 பங்கு - 35 நிமி
 4/4 பங்கு - 140 /60 நிமி
 - 2மணி 20 நிமி
 ஆகவே - காலை 7மணி 20 நிமி

 3/5 பங்கு - 84 நிமி
 1/5 பங்கு - 28நிமி
 5/5 பங்கு - 140/60நிமி
 - 2மணி 20நிமி
 ஆகவே - காலை 7மணி 20நிமி
 (ஏதோ ஒரு முறையைப் பயன்படுத்துக)

15. $\frac{4000}{20}$ x 100
 = ரூ.20.000

16. நாதன் + ரவியிலும் பார்க்க நாதன் + குமரன் 30 கி.கி.அதிகம்
 நாதன் + ரவியிலும் பார்க்க குமரன் + ரவி 20 கி.கி அதிகம்
 எனவே வித்தியாசம் 50 கி.கி
 ஆகவே நாதன் 50கி.கி.குமரன் 70 கி.கி

17. சகோதரர் x எனின் சகோதரி 2x
 X + 1 = 2x - 1
 2 = X
 ∴ x = 4
 ஆகவே ஆண்பிள்ளைகள் 3
 பெண்பிள்ளைகள் 4

18. நிசார் : அமீர் : முகமட்
 3 : 5 : 7
 $\frac{3x + 5x + 7x}{3}$ = 15
 15x = 45
 x = 3
 ஆகவே நிசாரின் வயது = 3 x 3
 = 9 வயது

19. 50% - 60புள்ளிகள்
 ∴ 100% - 60 x $\frac{100}{50}$
 - 120புள்ளிகள்

20. ரூபி

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்


பெயர் :- ப.பவித்திரா
தரம் :- 08
பாடசாலை:-யா/உடுவில் மகளிர் கல்லூரி

பெயர் :- ம.காருண்யா
தரம் :- 10
பாடசாலை:-யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------
பாடசாலை :- ------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------
வீட்டு முகவரி :- ------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------

# இந்து இளைஞர் பேரவையின் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு 2015



(சுன்னாகம்)

யாழ்.சுன்னாகத்தில் நடைபெற்ற இனிமையான பெறுமதிமிக்க நிகழ்வான் முத்தமிழ் சங்கமம் 2015 நிகழ்வினை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கை கிளையினர் நடாத்தியிருந்தனர்.

சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் திருமண மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இலங்கை கிளையின் தலைவர் சைவசித்தாந்த முதுகலைமாணி சி.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த அறிஞர் பெரு மக்கள் கதிரமலை சிவன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டதன் பின்னர் மாலை அணிவிக்கப்பட்டு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்த சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் கலாநிதி ஸ்ரீதர்ஷனன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த லண்டன் சைவத்திருக் கோயில்களின் ஒன்றிய செயலாளர் தர்ம. இரவீந்திரமோகன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேத நாதன் முதலானோர் உரைகளை நிகழ்த்தியிருந்தனர்.

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி பாலசிங்கம் பிருந்தாவின தமிழிசை நிகழ்வும் வசாவிளான் கோசலை அறநெறி பாடசாலை மாணவியின் பாம்பு நடன நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. விழாவின் சிறப்பு நிகழ்வாக சர்வதேச இந்து இளைஞர் பேரவையினர் துறைசார்ந்த அறிஞர் பெருமக்களையும் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களையும் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்(சைவத்தமிழ் பணி) பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் (மிருதங்கம்), இ.சிவசாகித்தியன் (தவிலிசை), சி.சசீவன்(இளம் பல்துறை கலைஞர்) முதலானவர்களுக்கு கலாநிதி நா.சர்வேஸ்வரக்குருக்கள் பேராசிரியர் மா.வேதநாதன், கலாநிதி ஸ்ரீ.தர்ஷனன், கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர அத்துடன் இந்நிகழ்வு சிறப்புற நடைபெறுவதற்கு உறுதுணையாக நின்ற பிரித்தானிய சைவத் திருக்கோயில்களின் ஒன்றிய செயலாளர் தர்ம.ரவீந்திர மோகன பேராசிரியர் மா.வேதநாதன் பொன்னாடை போர்த்தி சந்தன மாலை அணிவித்து கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து இறைவன் இங்கே இறங்கி வந்தால்? என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக பதிவாளரும் காணிப்பதிவாளருமான ஜெ.கோபிநாத் தலைமையில் சிறப்பு கவியரங்கம் நடைபெற்றது இக் கவியரங்கத்தில் நெடுங்கேணி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தவபாலன், முல்லைமணி பார்த்தீபன், ஊடகத்துறை மாணவன் சண்முகராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இலங்கை மற்றும் லண்டனில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முத்தமிழ் சங்கமம் நிகழ்வினையும் கட்டுரைகளையும் உள்ளடக்கி "முத்தமிழ் சங்கமம்" என்ற நூலினை பேராசிரியர் மா.வேதநாதன் வெளியிட சட்டத்தரணி வி.மணிவண்ணன் பெற்றுக் கொண்டார்.

# நெடியகாட்டில் குடிநீர் சேவை



வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் கோவில் வளாகத்தில் பொதுமக்களின் தேவை கருதி குடிநீர் பெறுவதற்கான வசதி ஒன்று செய்யப்பட்டுள்ளது. கோவிலின் வடகிழக்குத் திசையில், பருத்தித்துறை - வல்வெட்டித்துறை பிரதான வீதியில், இந்த நீர்வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான குடிநீர் கோவிலின் உள்வளாகத்தில் அமைந்துள்ள பூங்கொல்லையையொட்டி அமைந்துள்ள நன்னீர் கிணற்றிலிருந்து பெறப்படுகின்றது. ஏற்கனவே இருந்த நீர் பெறும் வசதிக்கான முறையைத் திருத்தி, தற்பொழுது வேம்பா பூட்டி நீர் பெற வசதி அளிக்கப்பட்டுள்ளது.

## வீதி விபத்துகள் தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிமுறைகளை அனுசரித்தல் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுத்தல் தொடரபான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை சாரதிகளுக்கான பயிற்சிக் கருததரங்கும் பிற்பகல் 1.30 மணி முதல் 3.30 மணிவரை நடத்துநர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

வடமாகாண போக்குவரத்து அமைச்சு, வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இக் கருத்தரங்கை ஏற்பாடுசெய்துள்ளதுடன் இதில் பங்குபற்றவுள்ள சாரதிகள் நடத்துநர்கள் ஆகியோரின் பெயர் விபரங்களை உறுதிப்படுத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச்சபை, தனியார் போக்குவரத்துச்சபை, சாலை முகாமையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளன.

## வாரம் ஒரு காரம்

# தீடீர் அதிர்வுகளும் திசைமாறப் போகும் முடிவுகளும்

### வடக்கிலும் தெற்கிலும் அன்று வென்றோர்க்கு இன்று அபாயமணி

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசாக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் எட்டாவது நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெற உள்ளது. இது தொடர்பான பேச்சுக்கள் தான் இன்று அதிகரித்துள்ளன. ஆனால் அதன் ஆழங்கள் தொடர்பான அலசல்கள் பலருக்கு அபாய மணிகளை அடிக்கின்றது.

வடக்கில் யாரை வைத்து யார் பிரசாரம் செய்தார்களோ அந்தப் பிரசாரப் பேசு பொருளே இன்று களத்தில் குதித்திருக்கின்றது என்றால் அதைப் பேசியவர்களின் நிலை என்ன?........

இது ஒரு புறமிருக்க, தெற்கில் குருநாகல் மாவட்டத்தில் மகிந்த போட்டியிடுவது பல துருவங்களில் தென்னிலங்கையரசியலையும் திசையையும் திருப்பும் செயற்பாடாகும்.

தனது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் போட்டியிட்டால் அண்ணன், மகன், தங்கை ஆகியோரின் விருப்பு வாக்குகளைப் பகிர்ந்து கொள்ள நேரிடும் என்பதற்காகவும் குறித்த தனது சொந்த மாவட்டத்தில் போட்டியிடாது அதிக வாக்காளர்களை உள்ளடக்கிய குருநாகல் மாவட்டத்தைத் தெரிவு செய்துள்ளார்.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை எனப்படும் கொழும்பு மாவட்டத்தை இவர் புறக்கணித்துவிட்டு சென்ற தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளை சம்பாதித்த குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதாக இறுதி நேரத்தில் முடிவெடுத்தமை ஆளும் தரப்பிற்கு அபாய மணியடிக்கின்றது.

நாம் எதை எப்படி விமர்சித்தாலும் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் தற்போது இருக்கும் சிந்தனை வேறு. மகிந்தா மீண்டும் வந்தால் தடைப்பட்டு இருக்கும் அபிவிருத்தி மீண்டும் விறுவிறுப்பாக நகரும் என்கின்ற எதிர்பார்ப்புக்களும், தற்போதைய அரசின் அபிவிருத்திப் பின்னடைவால் பலத்த அதிருப்திகளும் உள்ளன. ஆகையால் தென்னிலங்கை அரசியல் பக்கத்திலும் பல திருப்பு முனைகள் ஏற்படப்போகின்றது என்பது திண்ணம்.

வடக்குக் கிழக்கில் "ஜனநாயகப் போராளிகள்." எனும் கட்சி உதயமாகியுள்ளது. தமிழ்க் கூட்டமைப்பைக் குறி வைத்து மக்களின் வாக்குகளை வசமாக்க நினைக்கிறது அக்கட்சி. இன்றைய நிலையில் மக்களின் அபிவிருத்திக்கு அதிகம் செய்தவர்கள் யார் என்பதற்கப்பால் மக்களின் பலவீனப் பக்கங்களிற் கூடாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வாக்குகளைச் சுரண்ட அழகாக அரசியல் திட்டத்தை வகுத்துள்ளார் ஊடகவியலாளர் வித்தியாதரன்.

மறுதுருவத்தில் சிந்தித்தால் இவர்கள் எல்லாரோடும் ஒப்பிடும்போது "மக்கள் சேவை எனும் மனநிறைவோடு" தற்போதைய தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியும் தராதரமும் உடயவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மட்டும் தான் எனும் விமர்சனங்களும் உள்ளன. ஆனால் அன்று தொட்டு இன்றுவரை யதார்த்தவாதி வெகுசன விரோதி எனும் நிலையில் தான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டால் என்றோ ஒரு நாள் எம் மக்கள் எம்மைப் புரிந்து கொள்வார்கள் அன்று வரை போராடுவோம் என்று தெளிவாக கூறுவார்.

"அன்று மாகாணசபை மூலம் தான் அதிகாரங்களை வலுப்படுத்த முடியுமென்றோம். இத்தனை அழிவுகளிற்குப்பின் இன்று மாகாணசபைதான் முடிவாகியுள்ளது. அன்று இணைப்பரசியல் மூலம் தான் தமிழருக்கான சுயாட்சியை வென்றெடுக்க முடியும் என்றோம். இதற்காக எம்மைத் துரோகிகளாகப் பார்த்த மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இணக்க அரசியலுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றார்கள், ஆனால் அதை அறிமுகம் செய்த நாங்கள் மக்களின் பார்வையில் துரோகிகள் இது எந்த வகையில் நியாயம் என்பது தான் தெரியவில்லை" என்கிறார்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது தனித்தமிழ் கட்சியாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வீணையில் கேட்பதால் நன்றியுள்ளவர்களும் மானசீகமாக சிந்திப்பவர்களும் ஒப்பீட்டளவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே சிறந்தது என முடிவிற்கு வரவும் அதிக வாய்ப்புண்டு.

இந்தத் தடவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வாக்குகள் பெரும்பாலும் சிதறடிக்கப்படும். மறுபுறத்தில் அரசியல் பாதைகள் எல்லாவற்றினுள்ளும் இவர்கள் நகர்ந்து விட்டார்கள் எதிலும் வெற்றியில்லை எனும் நிலையை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.

இவர்களோடு இருந்த அரசியல் ஆய்வாளர்கள் கூட இவர்களை விமர்சிக்க ஆரம்பித்துவிட்டார்கள். படித்தவர்கள் பதவிவழி உத்தியோகஸ்தர்கள் பலர் "குப்பையன்கள" என குறிசூட்டி விட்டு விலத்த ஆரம்பித்து விட்டார்கள் யாருக்கு வெற்றி என்பதற்கப்பால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு இந்தத் தடவை தேர்தலில் அபாய மணிதான்.

– வெண்கட்டியன்

# யாழ்.கிளிநொச்சி நீர்வழங்கலுக்கு மேலதிக நிதி ஒதுக்க அங்கீகாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு செயற்றிட்டத்தின் மீள் கட்டுமானத்திற்கான மேலதிக பணம் ஒதுக்கீடு தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிடுகின்றார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

'யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு செயற்றிட்டத்தின் மீள் கட்டுமானத்திற்கான மேலதிக பணம் ஒதுக்கீடு தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது. முன்னதாக இரணைமடு குளத்திலிருந்து நீரைப் பெற்று இந்தத் திட்டத்தை செயற்படுத்தவிருந்த போதிலும், அது சாத்தியமில்லாமல் போனது.

இதனால் அருகிலிருந்து நீரைப பெறுவதற்கும், கடல் நீரைச் சுத்தமாக மாற்றி பெற்றுக்கொண்டு, யாழ்ப்பாணம் கிளிநொச்சி பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு தொகை நிதியினை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் மிகுதியை AFD பிரான்ஸ் இடமிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு தொகை நிதியினை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் மலக்கழிவு கருத்திட்டத்திற்கான நிதியை பெற்றுக் கொள்ளவும், AFD உடன் பேச்சுவார்த்தை நடத்தவும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக் கீமினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

# இரணை இலுப்பைக்குளம் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் இல்லை

## 23 கிராம மக்கள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் – இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தர வைத்தியர்கள் இன்மையால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது இலுப்பைக்குளம் கிராமம்.மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அழிவடைந்திருந்தது.பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைக்கப்பட்டது.

23 கிராம மக்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நாடவேண்டியுள்ள நிலையில், நிரந்தர வைத்தியர் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். இந் நிலையில், நீண்ட தூரத்தில் அமைந்துள்ள பூவரசன்குளம் வைத்தியசாலைக்கும் வவுனியா பொது வைத்தியசாலைக்கும் செல்ல வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ள னர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதும் இதுவரை எவ் விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்த ஐ.ம.சு.மு.கட்சித் தலைவர்கள்



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வைச் சந்தித்திருந்தனர். ஐ.ம.சு.மு.வின் தலைவர்கள் மற்றும் பங்காளிக் கட்சிகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டமை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் தாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு எடுத்துக் கூறியதாக சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த ஐ.ம.சு. மு.வின் செயலாளர் நாயகம் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் தினத்தில் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு சென்றிருந்த டளஸ் அழகப்பெருமவுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம் அது மட்டுமன்றி ஐ.ம.சு .மு வேட்பாளர்கள் சிலரை விசாரணை ஆணைக் குழுக்களுக்கு அழைத்து விசாரணைக்கு உட்படுத்துவது தொடர்பிலும், இதனால் வேட்பாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி பற்றியும் எடுத்துக் கூறினோம்.

அரச ஊடகங்கள் மற்றும் அரச வளங்கள் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றமை மற்றும் தேர்தல் விதிகளை மீறும் வகையில் நிவாரணப் பொருட்கள் மற்றும் நியமனங்கள் வழங்குவது பற்றியும் எடுத்துக் கூறியிருந்தோம்.

நாம் முன்வைத்த காரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக தேர்தல்கள் ஆணையாளர் தமக்கு உறுதிமொழி வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# வடக்கின் நோயாளியாக வன்னி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது கட்சி வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டிருக்கிறது. வேட்பாளர்கள் தெரிவு தொடர்பாக மாவட்டங்கள் கிராமங்கள் தோறும் மக்களிடம் கருத்துக்கள் ஆலோசனைகள் எவையும் பெறப்படாமல் கொழும்பில் இருந்து கொண்டு தான்தோன்றித்தனமாக (TNA) நடந்து கொண்டுள்ளது போலவேபடுகிறது.

முக்கியமாக வன்னித் தேர்தல் தொகுதியில் (TELO) மற்றும் EPRLF) கட்சி உறுப்பினர்களில் புதியவர்களுக்கு வழிவிடாது மீண்டும் வினைத் திறனற்ற ஆட்களுக்கே வேட்பாளர் நியமனம் பெற அனுமதி அளித்துள்ளமையானது வன்னியில் பல்வெறு தரப்பினரையும் எரிச்சலடையச் செய்திருப்பதுடன் கடும் ஆத்திரத்தையும் வெறுப்பையும் TNA தலைமைப்பீடத்தின் மீது ஏற்படுத்தியிருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் வன்னி மாவட்ட மாணவர்கள் மற்றும் மாவட்டத்தின் சில முக்கிய பிரமுகர்கள், குருக்கள், வர்த்தகர்கள் மீனவர்கள் ஆசிரியர்களிடம் கருத்துக்கள் கேட்டபோது வேட்பாளர்கள் தெரிவில் பழையவர்களையே மீண்டும அனுமதித்தமை தொடர்பாக வெறுப்பையும் அதிருப்தியையுமே அவர்கள் வெளியிட்டனர்.

மீண்டும் மீண்டும் வினைத்திறனற்ற பழையவர்களுக்கே இடம் கொடுக்க TNA அனுமதித்தமையானது வன்னி மாவட்டம் வடக்கின் நிரந்தர நோயாளியாகவே தொடர்ந்து இருக்க விரும்புவது போலத் தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலும் அதற்குமுன்னைய தேர்தலிலும் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டவர்கள் எவரும் வெற்றி பெறவில்லை. TELO சார்பில் போட்டியிட்டவர்கள் இருவரும – மைத்துனர்கள் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உனக்கு நான் எனக்கு நீ என்றவாறு ஒருவகை மோசடித் தேர்தல் புரிந்தே தமது பதவிகளை தக்க வைத்து வந்துள்ளனர். ஒருவர் அடிக்கடி தமது குடும்பத்தை தரிசிக்க லண்டன் ஓடுவதும் இன்னொருவர் பத்திரிகைகளில் அதிரடி அறிக்கைகளோடு மட்டும் நின்று விடுவதையும் தவிர வன்னியில் ஆற்றிய பணிகள் என்ன என்பதை மக்கள் அறிவர்.

**வன்னி உறுப்பினர்கள் சாதனைகள்?**

பலதடவைகள் வன்னி உறுப்பினர்களாக இருந்து வன்னி மண்ணுக்கு இவர்கள் ஆற்றிய மகத்தான பணிகள் பற்றி தாமாகவே சுயமதிப்பீடு செய்து கொள்வது நல்லது.

கொக்கிளாய், நாயாறு சிங்களக்குடியேற்றம், மன்னாரில் மடுறோட், நரிக்காடு சிங்களக் குடியேற்றம் தொடர்பில் இவர்களின் நிலைப்பாடு என்ன? முள்ளிக்குள மீள்குடியேற்றம் கிடப்பில் உள்ளது. திருக்கேதீஸ்வரம் முருங்கன் இந்து ஆலயங்களில் பௌத்த விகாரைகள்–பறவைகள் சரணாலயம் (5000 ஹெக்ரேயர்) முசலியில் கல்லாறு காடு–மாவில்லு காடு, மாந்தையில் நீந்தன் காடு போன்றவை வனபரிபாலன திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட போது இவர்கள் எங்கே போயிருந்தார்கள், மன்னாரில் டைனமெட் வெடி வைத்தும் நாசகார மீன்பிடி முறைகள் மூலம் கடல் வளத்தை அழித்து பல மீனவர் குடும்பங்களின் வயிற்றில் அடித்த போது இதற்கு எதிராக இவர்கள் எப்போதாவது குரல் கொடுத்து அதனை நிறுத்தினார்களா? இந்திய மீனவர் விவகாரத்தில் இவர்களின் நிலைப்பாடு என்ன? வேலைவாய்ப்பிலும் வீட்டுத் திட்டத்திலும் ஏற்பட்ட மோசடிகளைத்தட்டிக் கேட்டார்களா? இவைகளுக்கெல்லாம் விடை வெறும் பூச்சியமே–ஆற்றலும், வினைத்திறனுமற்ற இவர்களை மீண்டும் களம் இறக்க TNA அனுமதி வழங்கியமை கடுமையாக கண்டிக்கத்தக்கது. இவர்களை விட்டால் வேறு வேட்பாளர்கள் வன்னியில் இல்லையா?

புதியவர்களுக்கு இடம்கொடாது தாங்கள் தொடர்ந்தும் வேட்பாளர்களாக நிற்பது ஒரு வகை இழிசெயலாகவும் அருவருக்கத்தக்க செயலாகவும் பலரும் பார்க்கின்றனர். TNA யின் செயற்பாடு வன்னியில் மேலும் உறுப்பினர்களை இழக்கும் நிலைக்கே கொண்டு போகப் போகிறது மக்கள் பழையவர்களுக்கு மட்டுமல்ல வீட்டு சின்னத்திற்கே புள்ளடி போடும் நிலையில் இல்லை என்பதையும் சில கிராமங்களுக்கு TNA உறுப்பினர்கள் செல்ல முடியாத ஒரு அவல நிலையும் மன்னாரில் தோன்றியுள்ளது என்பதையும் தலைமைப்பீடத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் எவனும் தனது வாக்கினை கிழித்து எறிவானே தவிர இது போன்ற குப்பாடித்தனமான அரசியல்வாதிக்கு துணை போகமாட்டான் என்பதையும் கவனத்திற்கொள்வது நல்லது.

சொய்சா
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

# மகிந்தவுக்கு விசேட வரப்பிரசாதங்கள் ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதிக்கு உரிய வரப்பிரசாதங்களுடன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதால் ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து குருநாகல் மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் அகிலவிராஜ் காரியவசம் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ விசேட வரபிரசாதங்களைப் பெற்று தேர்தலில் போட்டியிடுவதால் தான் உள்ளிட்ட ஏனைய வேட்பாளர்களின் உரிமை மீறப்படுவதாக கடிதத்தில் அவர் கூறியுள்ளார். எனவே இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அகில விராஜ் காரியவசம் தேர்தல்கள் ஆணையாளரை கேட்டுக் கொண்டுள்ளார்.

(09) பின்வரும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளவும் அதற்கிணங்க 25 - 27 வரையான வினாக்களுக்கு விடை தருக

| (X) | (Y) | (Z) |
|---|---|---|
| M L O | O A K | K O L |
| + M L O | - M O L | - O L M |
| 2 4 6 | 2 2 2 | 1 1 1 |

24. தரப்பட்ட தகவலுக்கு ஏற்ப O இன் பெறுமானம் என்ன?
1) 2 2) 3 3) 5

25. தரப்பட்ட தகவலுக்கு ஏற்ப A இன் பெறுமானம் என்ன?
1) 5 2) 2 3) 4

26. தகவலுக்கு ஏற்ப L இன் பெறுமானம் என்ன?
1) 5 2) 4 3) 2

(10) கதை ஒன்றை உருவாக்குவதற்குப் பொருத்தமான குறிப்புச்சட்டகமொன்று இடைவெளிகளுடன் கீழே தரப்பட்டுள்ளது 28 - 30 வரையான வினாக்களுக்கு இடைவெளிகளை நிரப்ப கீழே உள்ள மூன்று பதில்களில் மிகப்பொருத்தமானதைக் கொண்டு தனித்தனியே நிரப்பினால் கதைக்குறிப்பு பூரணமடையும்

27. ஒரு ஏழை மனிதன் ..........................................
(1) ஐயோ இப்படி ஒரு வாழ்க்கை
(2) வாழ்வதே பெரும் பிரச்சினை
(3) மகிழ்ச்சியான வாழ்க்கை

28. கடன் பணம் ..........................................
(1) பழுதடைந்த வாகனமொன்று
(2) பரந்த எதிர்பார்ப்பு
(3) சிறுவியாபாரம்

29. நல்லகாலம் நண்பர்கள் பலர் சந்தோசமான வாழ்க்கை பணவிரயம் ..................துரதிஷ்டமான காலம்
(1) வியாபாரத்தில் நட்டம்
(2) சமாதானம் நிறைந்த காலம்
(3) மகிழ்ச்சியான காலம்

30. பாடசாலையில் உள்ள சதுரவடிவான விளையாட்டு மைதானம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 21 மீற்றர் ஆகும் அதன் எல்லே வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கொடிகள் கட்டப்பட்ட கம்பங்கள் உள்ளன அவ்வாறு உள்ள கம்பங்களின் எண்ணிக்கை யாது?
(1) 48 (2) 28 (3) 36

31. ராணியின் தாய் வாணியின் மகளெனில் ராணி ஆனவள் வாணியிற்கு என்ன உறவு முறை?
(1) பேத்தி
(2) பாட்டி
(3) மகள்

32. ஒரு இறேந்தை இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் ஐந்து சம துண்டுகளாக வெட்டப்பட்டன. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 3மீற்றர் எனின் தொடக்கத்தில் இருந்த இறேந்தையின் நீளம் யாது?
(1) 30m
(2) 20m
(3) 15m

நேற்று பிரசுரமாகிய க.பொ.த (சா/த) வினாக்களுக்கான விடைகள் யாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரசுரமாகும்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015


பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு




(01) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01) இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ள விலங்கு எது?
பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக
* தைமாதம் எனக்கு பொங்கலிடுவார்கள்
* தாவரத்தை உணவாக தருவார்கள்



(i) (ii) (iii)


02) இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் எது?
* மிகச்சுவையாம்
* அனைத்துக் காலங்களிலும் பெறலாம்
* விலை மலிவானதாம்



(i) (ii) (iii)


(02) 3ஆம், 04ஆம் வினாக்களுக்கு வெற்றுக்கூட்டில் வரவேண்டிய விடையைக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக .

03)



(i) (ii) (iii) (iv)


04)



(i) (ii) (iii) (iv)


(03) 05ஆம், 06ஆம் வினாக்களுக்கு வெட்டி அகற்றப்பட்ட இடத்தில் வரவேண்டிய விடையைக் காண்க

05)




(i) (ii) (iii)

06)





**(04) 07ஆம், 08ஆம் வினாக்களுக்கு 1, 2, 3, 4, 5 வரையான இலக்கங்களை இடுவதன் மூலம் ஒழுங்குபடுத்துக**

07)




( ) ( ) ( ) ( ) ( )

08)



( ) ( ) ( ) ( ) ( )

**(05) கீழே தரப்பட்டுள்ள கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக**





09) பட்மின்டன் ஒன்றினதும் கிரிக்கெட் மட்டை ஒன்றினதும் விலை யாது?
1) 200 ரூபா 2) 900 ரூபா 3) 350 ரூபா

10) விலை கூடிய பொருள் எது?
1) ஹொக்கிமட்டை 2) பந்து 3) கிரிக்கெட் மட்டை

11) சமஅளவான பொருட்கள் இரண்டும் எவை?
1) பந்து, பற்மின்ரன் 2) பந்து, ஹொக்கி மட்டை 3) கிரிக்கெட் மட்டை, பெற்மின்ரன்

12) தரப்பட்ட தகவலை நன்கு அவதானித்து வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக






**(06) ஒரு நிகழ்வின் ஐந்து வரிகள் மாறி எழுதப்பட்டுள்ளன அதன் சரியான ஒழுங்கு முறைக்குரிய விடை எதுவெனக் கண்டு கீறிடுக**

13) 01. இல்லை அது லொறியாகும்
02. அது கிளிநொச்சிக்குப் போகும் பஸ்வண்டி, முல்லைத்தீவுக்குப் போகும் பஸ் அல்ல
03. பஸ் ஒன்று வருகிறது எங்கு போகும் பஸ் வண்டியோ தெரியவில்லை
04. வருவது ஒரு பஸ் வண்டியா?
05. அதோ! முல்லைத்தீவு பஸ் வருகிறது நாம் அதில் ஏறுவோம்
(1) 4, 1, 3, 2, 5 (2) 5, 1, 3, 4, 2 (3) 3, 1, 2, 4, 5

14) 01. இருபதை நான்கால் பிரித்தார்
02. ஏழுடன் ஏழைக் கூட்டினார்
03. விடையை ஐந்தினால் பெருக்கினார்
04. மறுமொழி இருபத்தைந்தாகும்
05. பதின்நான்குடன் ஆறைக்கூட்டினார்
(1) 2, 5, 1, 3, 4 (2) 2, 5, 1, 4, 3 (3) 5, 1, 2, 4, 3

**(07) கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு 15 - 21 வரையான் வினாக்களுக்கு விடை தருக**

J 5

15) இந் நிரையில் எத்தனை J எழுத்துக்கள் உள்ளன
1) 10 2) 8 3) 9

16) இங்கு மிகக்குறைவாக காணப்படுவது எது?
1) இலக்கம் - 8 2) எழுத்து - K 3) இலக்கம் - 6

17) இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை எழுத்துக் காணப்படுகிறது அந்த எழுத்து யாது?
1) எழுத்து - K 2) எழுத்து - J 3) எழுத்து - R

18) பெறுமதியின் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக் காட்டும் விடை யாது?
1) தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு
2) தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு
3) வெள்ளி, செம்பு, தங்கம், இரும்பு

19) "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்.

**(08) 20 - 23 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான வாக்கியத்தை அமைப்பதற்கு பொருத்தமான ஆங்கில எழுத்தின் கீழ் கோடிடுக**

**இவ்வாக்கியங்களை அமைப்பதற்கு உதவும் ஆங்கில எழுத்துக்களாகும்**

| | | |
|---|---|---|
| A - பிள்ளை | D - வீட்டில் | G - சென்றது |
| B - அப்பா | E - பாடசாலை | H - கேட்டது |
| C - அம்மா | F - வைத்தியசாலை | I - இருந்தாள் |

**தரவின் படி புள்ளிக்கோட்டில் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக**

20) .............................. அப்பாவிடம் பணம் ..............................
1) A,H 2) H,A 3) C,I

21) .............................. அப்பா வரும் வரை .............................. இருந்தாள்
1) A,E 2) C,D 3) D,I

22) .............................. பாடம் படிக்க .............................. க்கு ..............................
1) B, D,I 2) A, E,G 3) A, F, G

23) ..............................வுடன் அம்மா ..............................யில ..............................
1) B, F, I 2) B, C,H 3) C, D,G

# தேர்தல் சட்டங்கள் மீறுவதை தடுப்பதற்கு துப்பாக்கிகளுக்கு பதில் புகைப்படக் கருவிகள்

## பொலிஸாரைப் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்து

(கொழும்பு)

பொது தேர்தலின் போது, தேர்தல் சட்டங்களை மீறுவதை தடுக்கும் வகையில் துப்பாக்கிக்கு பதிலாக புகைப படக் கருவிகளை பயன்படுத்த பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப் பிரிய குறிப்பிடுகின்றார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சநதிப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும கருத்து தெரிவிக்கையில்,

தேர்தல் சட்ட திட்டங்களை மீறுபவர்களை புகைப்படம் எடுத்து வழக்கு தொடருமாறு தாம் ஆலோசனை வழங்கியிருக்கின்றோம்.

சட்டத்தை மீறி ஊர்வலம் செல்பவர்கள் மீது சூட்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு கூறியிருந்தேன். அதாவது துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் அல்ல புகைப்படக்கருவியினால் தாக்குதல் நடாத்த கூறியிருந்தேன்.

நாம் துப்பாக்கி கொண்டோ, தண்ணீர் தாக்குதல் நடாத்தியோ, கண்ணீர் புகைக் குண்டு பயன்படுத்தியோ, ஊர்வலத்தைக் கலைக்க வேண்டாம் என பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியிருந்தோம். அதற்கமைய பொலிஸார் செயற்பட்டுள்ளனர். கொழும்பு உட்பட பல பகுதிகளில் இவ்வாறான ஊர்வலங்கள் எதுவும் செல்லவில்லை. இது குறித்து நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

எனினும் குருநாகல் உட்பட சில பகுதிகளில் இவ்வாறான ஊரவலங்கள் சென்றதாக அறிகின்ற போதிலும், நாடுதளுவிய ரீதியில் பாரியளவு பதிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இது குறித்து நாம் மகிழ்ச்சி கொள்வதுடன், எமது கோரிக்கைக்கு அமைய சட்டத்தினை மதித்து செயற்பட்ட அரசியல் வாதிகள் மற்றும் [illegible]களின் தொண்டர்களுக்கு [illegible]றி கூறுகின்றோம்.

அத்துடன், தேர்தல[illegible] வாக்களிக்கும் நிலையங்களின் எண்ணிக்கையினை உறுதியாகக் கூற முடியாதுள்ளது. காரணம் முன்னர் தேர்தல் வாக்களிக்கும் நிலையமாக செயற்பட்ட பல விகாரைகளின் புத்த பிக்குகள் இம்முறை வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளதால், நாம் எமது தேர்தல் நிலையங்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கமைய 100 முதல் 150 வரையிலான தேர்தல் நிலையங்களில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தாங்கிகள் அமைக்கப்பட்டு இரு ஆண்டுகள் இதுவரை குடிநீர் வழங்கல் இல்லை

## மூன்று வாரங்களில் வழங்குவோமென வாக்குறுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயனில் 06 மாதங்களில் குடிநீர் வழங்குவோமென தொடங்கப்பட்ட குடிநீர்த்திட்டமொன்று இரு ஆண்டுகள் கடந்தநிலையிலும் குடிநீர்த்திட்டம் செயற்படுத்தப் படாமல் முடங்கிக்கிடக்கின்றது.

இருஆண்டுகளுக்கு முன்னர் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் 16 மில்லியன் ரூபா செலவில் அக்கராயன் மத்திய பகுதி, கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்குப் பகுதிகளுக்கான குடிநீர்த்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்டு வேலைகள்



நிறைவடைந்தநிலையிலும் இதுவரை குடிநீர் வழங்கல் தொடங்கப்படவில்லை. அக்கராயனில் யூன், யூலை மாதங்களில் கடுமையான குடிநீர் நெருக்கடி ஏற்படுவது வழமையாகும். அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளின் மாணவர்களும் பிரதேச மக்களும் குடிநீர் நெருக கடியினை எதிர்கொண்டுள்ள நிலையில் குடிநீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாமலிருப்பது பெரும்நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளரான தி.பாரதிதாசன் கருத்துத் தெரிவிக்கையில், நீர் வழங்குகின்ற கிணற்றில் கலங்கல் தன்மை காணப்படுவதன் காரணமாக அக்கலங்கல் தன்மையினை நீக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

குறைந்தது மூன்றுவாரங்களில் குடிநீர் வழங்குதலை மேற்கொள்ளமுடியுமென நம்புகின்றேன். குடிநீர் வழங்கல் என்பது உடனடியாக மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் மக்களுக்கு தூய்மையான குடிநீரையே வழங்கவேண்டும். அதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றதெனவும் அவர் தெரிவித்தார். (160)

# பழைய முறிகண்டியில் மணல் அகழ்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் பழைய முறிகண்டிக்கிராமத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மணல் அகழ்வினால் கிராமத்திற்கு பெரும் சூழலியல் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

48 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் மீள்குடியேற்றம் தொடங்குவதற்கு முன்னரே பெருமளவு மணல் அகழ்வு இடம்பெற்று வந்தது.

கிராமத்தில் நடைபெறும் மணல் அகழ்வு தொடர்பாக வட மாகாண முதலமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட செயலர், துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோருக்கு கிராம மக்களினால் மனுக்கையளிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக டிப்பர்களில் மணல்கொண்டு செல்லப்படுவதினால் கிராமத்தினுடைய ஒரேயொரு போக்குவரத்து வீதி குனறும் குழியுமாக மாறியுள்ளது.

பழையமுறிகண்டி ஆற்றின் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளன. கிராமத்தில் நடைபெறும் மணல் அகழ்வினை தடுத்து நிறுத்துமாறு கிராமத்தின் அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட தரப்பு எல்லோரிடமும் மனுக்கையளித்துள்ளது. (160)

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?



### துலாம்

*[சித்திரை 3, 4, / சுவாதி, விசாகம்.1,2, 3]*

ஏழரைச் சனி கடைக்கூறு நடைபெறும் உங்களுக்கு குரு 5/7/2016 வரை 11 இல் நின்று இன்பசுகங்களையும் இலாபத்தையும் அள்ளித்தருவார். பயண முயற்சிகள் அந்த மாதிரி நிறைவேறும். புதிய ஜீவன் ஏற்பட்ட அறிகுறி தென்படல், வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல், பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் வெளியூர் யோகம் கிட்டுதல், நீதிமன்ற முடிவுகள் சாதகமான முடிவினைக் கொண்டு வருதல், புதிய மனை, வாகனம், ஏற்பட சகோதரர் மற்றும் பிதாவின் கருணை ஏற்படும். ஏழரைச்சனி 16/12/2017 இல் விலகி விடும். சனீஸ்வரன் 2 இல் நின்று இதுவரை காலம் கைவிட்ட சங்கதிகள் காலடியின் கீழ் முத்தமிடல் உறவினருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் அகன்றுவிடல், இழுபட்ட திருமணம் நிறைவேற பேச்சுவார்த்தை சாதகமாக அமைந்து விடும். ராகு கேது முறையே 9/1/2016 வரை12 இல், 6 இல் நிற்பதும், பின் 1 1/2 ஆண்டுக்கு 11 இல் , 5 இல் அமைவதும் பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல் அதிஷ்டகரமான வாழ்வினை அனுபவிக்கப் போகின்றீர்கள். வியாபார விருத்தி தக்கவைக்க புதிய இடங்களில் கிளை நிறுவனம் திறக்கப்படல். நோய் குணமடைந்து தேகபலம் மேம்படையும்.

ஜோதிர் வித்யா ரத்னா
சாமஸ்ரீ தேச மானிய
வி.ஏ.சிவராசா
(அரச விருது பெற்ற ஜோதிடர்)



# ஈத் பெருநாள் வாழ்த்து

இன்று நோன்புப் பெருநாளை கொண்டாடும் அனைத்துலக முஸ்லிம்களுக்கும் ஈத்முபாரக் இனிய பெருநாள் வாழ்த்தை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன். இதே போன்று நீங்களும் முடிந்தவரை உங்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களை பரிமாறி இரத்த பந்துக்கள் வீடுகளுக்கு விஜயம் செய்து பயனுள்ள பல செயல்களை செய்து இந்த நல்ல நாளை எதிர்கொள்ளுங்கள். உங்கள் பெற்றோருடன் சில மணி நேரங்களை கழித்து அவர்கள் உங்களை மகிழ்வடையச் செய்து அவர்கள் து ஆ பரக்கத்தை பெற்றுக்கொள்ளுங்கள். அத்தோடு மாற்றுமத நண்பர்களையும் அன்புடன் அளவளாவி உண்டு மகிழ அவர்களுக்கும் விருந்து படையுங்கள். மேலும் நீங்கள் தொழும் பெருநாள் தொழுகையிலும் பர்ளு தொழுகையிலும் உலக முஸ்லிம்களுக்காகவும் சர்வதேச அமைதிக்காகவும் து ஆச் செய்து தேவையற்ற விவாதங்களை தவிர்த்து சாந்தி சமாதானத்து டன் வாழும் வழியினை ஏவுங்கள்.


எமது உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறைகளை நீக்கி முழுமையான முஃமின்களாகவாழ்வதற்கான உந்து சக்தியை பெற்றுக்கொள்ள அல்லாஹ் இந்த சந்தர்ப்பத்தை தந்தது பெறும் பாக்கியம் அதை செயற்படுத்த நாம் இந்த புனித மாதத்தை அடைந்தது அதைவிட பெரும் பாக்கியம். அதனால் ரமழானின் சுவையை உணர்ந்துள்ள நாம் எம்நுகர்வை நகர்வாக்கி நன்மைகளை பன்மடங்காக்கும் எதிர்வரும் நாட்களில் எல்லாப்புகழும் இறைவனுக்கே!

அல்ஹம்து லில்லாஹ்! – ஈத்முபாரக் –



அல்ஹாஜ் மௌலவி
ஏ.எம்.ஏ. அஸீஸ் (ஹாஸிமி)
யாழ் / கிளி. மாவட்ட உலமா சபை தலைவர்.

# மின்சாரம் வழங்குமாறு பழைய முறிகண்டி மக்கள் மனு



முல்லைத்தீவு பழைய முறிகண்டிக் கிராமத்தில் மின்சாரம் கிடைக்கப்பெறாத குடும்பங்கள் துணுக்காய் பிரதேச செயலரிடமும் மற்றும் இலங்கை மின்சார சபையிடமும் மனுக்கையளித்துள்ளன.

48 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் 15 குடும்பங்களுக்கு நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப்படவில்லை. யானைகளின் தொல்லையினை எதிர்கொண்டுள்ள தமது கிராமத்திற்கு மின்சாரம் முழுமையாக வழங்கும்படி தமது வேண்டுகையில் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் அடிப்படை வசதிகள் குறைந்தநிலையில் காணப்படும் கிராமங்களில் பழைய முறிகண்டிக்கிராமமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# இராணுவ அலுவலகங்கள் மீது அமெரிக்காவில் தாக்குதல்

## 4 கடற்படை வீரர்கள் பலி



அமெரிக்கா வோஷிங்டன், இராணுவ அலுவலகங்கள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 4 கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினர் நடாத்திய பதில் தாக்குதலில் துப்பாக்கிச் சூடு நடாத்தியவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் உள்ள சாத்தநூகாவில் உள்ள இராணுவ அலுவலகம் மற்றும் கடற்படை மையம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டு உள்ளது.

குறித்த துப்பாக்கிதாரர் முதலில் அப்பகுதியில் உள்ள இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் முகாமிலும், இரண்டாவது கடற்படை மையம் மீதும் தாக்குதல் நடாத்தி உள்ளதாகவும் பின்னர் இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் மையத்தில் இருந்து, 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடற்படை மையத்திற்குச் சென்று நடாத்திய துப்பாக்கி சூட்டில் 4 கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர் என்று செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

உடனடியாக மர்ம நபரை சுற்றிவளைத்த பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடாத்தினர். பாதுகாப்பு படையினர் நடாத்திய தாக்குதலில் துப்பாக்கிதாரரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த சம்பவம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதையடுத்து அமெரிக்காவில் பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டு உள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஜெயாவின் சொத்துக்குவிப்பு வழக்கு திருத்திய மனுவை ஏற்றது நீதிமன்றம்



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு தாக்கல் செய்த திருத்தப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் எனத்தெரிகிறது.

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து கர்நாடக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. கர்நாடகா தாக்கல் செய்த மனுவில் 1,223 மற்றும் 1,453 ஆவது பக்கங்கள் வெற்றுத்தாள்களாக இருந்ததாகவும், அசல் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் உச்சநீதிமன்ற பதிவாளர் தெரிவித்திருந்தார்.

மேலும், முதல் தகவல் அறிக்கையின் படிவம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உச்ச நீதிமன்ற பதிவாளர் குறிப்பிட்டிருந்த பத்து குறைபாடுகளையும் சரி செய்து கர்நாடக அரச வழக்கறிஞர் ஜோசப் அரிஸ்டாட்டில் கடந்த வாரம் மீண்டும் மனு தாக்கல் செய்தார்.

கர்நாடக அரசின் திருத்தப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. வழக்கு பட்டியலில் இடம் பெற்றதையடுத்து, எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என தெரிகிறது.

# 39 மருந்துப்பொருட்களுக்கு விலை கட்டுப்பாட்டு பட்டியல்

இந்தியாவில் மருந்துப்பொருட்களின் விலை கட்டுப்பாட்டு பட்டியலில் மேலும் 39 மருந்துப்பொருட்களை இணைக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

குறித்த மருந்துப்பொருட்களின் விலையை மருந்து நிறுவனங்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப உயர்த்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 500 மருந்துகள் விலை கட்டுப்பாட்டு பட்டியலில் இடம்பெற்றுள்ள நிலையில் 39 மருந்துக்கள் விலை கட்டுப்பாட்டு பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 30 மருந்துப் பொருட்களை இந்த பட்டியலில் மத்திய அரசு அணைத்திருந்த நிலையில் மேலதிகமாக 39 மருந்து பொருட்களின் விலை இணைக்கப்பட்டுள்ளது.

விலை கட்டுப்பாட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்த மருந்துகளின் விலையை 1 முதல் 10 சதவீதம் மட்டுமே மருந்து நிறுவனங்கள் ஓராண்டில் உயர்த்திக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரட்டை குண்டுவெடிப்பு நைஜீரியாவில் 50 பேர் பலி



வடகிழக்கு நைஜீரியாவில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்பு தாக்குதல்களில் சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த குண்டு வெடிப்பு சம்பவமானது, கானோ மாவட்டத்தின் தலைநகரான கானோ நகரில் நேற்று முன்தினம் வெளிக்கிழமை ஜி.எம்.டி நேரப்படி சுமார் 16.20 இற்கு நடைபெற்றுள்ளதாகவும் இரண்டாம் குண்டு வெடிப்பானது முதலாவது குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சில நிமிடங்களில் நடைபெற்றதாகவும் உள்ளூர் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்பு தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸாரும், அம்புலன்ஸ் ஊழியர்களும் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு ஏற்றிச் சென்றுள்ளனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

அங்குள்ள முஸ்லிம்கள் ரம்ழான் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த தாக்குதல்களுக்கு இது வரை எதுவித தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், இத் தாக்குதலை போகோ ஹரம் தீவிரவாத அமைப்பே மேற்கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# இந்திய ஜனாதிபதியின் இப்தார் விருந்தை புறக்கணித்த மோடி



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அளித்த இப்தார் விருந்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில், பிரதமர் மோடி நேற்றமுன் தினம் வடகிழக்கு மாநிலங்களின் முதலமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த வருடம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அளிக்கப்பட்ட இப்தார் நோன்பு விருந்தினையும் மோடி மற்றும் அவரது ஆதரவாளர்கள் தவிர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனாதிபதி அளித்த விருந்தில் துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அருண் ஜெட்லி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகமது சயீத், பாகிஸ்தான் தூதுவர் அப்துல் பாசித் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், பல்வேறு முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# எரிமலைகளின் குமுறலால் விமான நிலையங்கள் செயலிழப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் எரிமலை குமிறல் காரணமாக மேலும மூன்று விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

நோன்பு பெருநாள் விடுமுறைக்காக சொந்த நாட்டிற்கு திரும்பும் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு எரிமலைகளின் குமுறல் காரணமாக புகை வெளியேறிவரும் நிலையில் இந்தோனேஷியாவின் ஐந்து விமான நிலையம் மூடப்பட்டுள்ளன.

றாரண் எரிமலை கடந்த பல வாரங்களாக புகையை வெளியேற்றிவருவதுடன் இதன் காரணமாக கடந்த வாரம் பிரபலமிக்க பாலி தீவிலுள்ள விமான நிலையம் உள்ளிட்ட மூன்று விமான நிலையங்கள் மூடப்பட்டு பின்னர் திறக்கப்பட்டிருந்தன.


எனினும் இந்தோனேஷியாவின் இரண்டாவது மிகப் பெரிய நகரான சுரபயாவிலுள்ள விமான நிலையங்கள் உள்ளிட்ட ஏனைய விமான நிலையங்களில் பயணிகள் பயணங்களை தொடர முடியாமல் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

புனித ரமழான் மாத நிறைவைக் குறிக்கும் நோன்பு பெருநாளுக்கு முன்னதாக இந்த எரிமலைகள் புகையை வெளியிட்டு வருகின்றன.

உலகில் அதிகளவு முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட இந்தோனேஷியாவில நோன்பு பெருநாள் முக்கியமான ஒன்றாக உள்ளதுடன் பலர் அவர்களின் குடும்பங்களுடன் இந்த புனித நாளை கொண்டாடுவதற்காக பயணங்களை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வலி.மேற்கின் அபிவிருத்தி

# உத்வேகத்துடன் தொடர அணிதிரண்டு வாருங்கள்



(சுழிபுரம்)

வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கும் பட்டதாரிகளுக்கும், தொழில் திறன் தேர்ச்சி பெற்ற ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு குறுகிய காலத்தில் நிரந்தர வேலை வாய்பை பெற்றுக்கொடுத்துள்ளேன்.

விரைவில் இன்னும் ஆயிரம் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுத்து உதவுவேன்.

இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளரும், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும், நாடாளுமன்ற வேட்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

வலி.மேற்கில் இடம்பெற்ற புத்திஜீவிகள், இளைஞர்கள் கருத்துப் பகிர்வு அமர்வில் கலந்து கொண்ட சிவகுரு பாலகிருஸ்ணன் மேலும் பேசுகையில்,

வடமாகாணத்தில் இன்றும் சரி அன்றும் சரி பல ஆயிரக் கணக்கான கா.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்களும், பட்டதாரிகளும் ஏனைய தரத்தினரும் அரச வேலைகளில் கடமையாற்றுகின்றனர். இவ்வாறாக தரத்தில் உயர்ந்தவர்களை இனம்கண்டு எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தாவூடாக உரிய விபரங்களை சமர்ப்பித்து அரச பணிகளில் அமரச்செய்துள்ளோம்.

இன்று நாட்டில் வேலை பெற்றுத்தருவதாக பலர் விபரங்களை பெற்று ஏமாற்று வித்தைகாட்டி வருகின்றனர். நாம் அவ்வாறு ஏமாற்றுவித்தை காட்டி மக்களையோ இளைஞர்களையோ ஏமாற்றுவதில்லை. நாம் எம்மால் செய்யக்கூடிய வேலை வாய்ப்பு உதவிகள், வாழ்வாதார உதவிகள், சிறு கைத் தொழில் உதவிகளைத் தொடர்ந்து உதவியவண்ணமே உள்ளோம். தொடர்ந்து உதவுவதற்கு களம் பதித்துள்ளோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்வதன் மூலம் அடுத்த ஐந்து ஆண்டு கால அபிவிருத்திகளை விரைந்து முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இன்று வலி.மேற்கில் இடம்பெற்ற அபிவிருத்திகள், உட்கட்டுமானங்களுக்கு நாம் கைகொடுத்து உதவுகின்றோம். சங்கானையிலும், அராலியிலும் காணிப்பகிர்வுத் திட்டம் ஊடாக மக்களுக்கு உறுதிகள் கிடைத்திட நாம் வழிவகுத்திருந்தோம். தற்போது சங்கானையில் புறநெகும திட்டத்தில் 32 மில்லியன் ரூபா செலவில் புதிய மீன் சந்தை அமைக்கப்பட்டுவருகிறது.

இவ்வாறாக நாம் வடக்கில் உள்ளூராட்சி சபைகள் ஊடாக பயனுள்ள சேவைகளை முன்னுதாரணமாக ஆற்றிவருகின்றோம். எதிர்காலத்திலும் திட சங்கற்பத்துடன் தொடர்ந்து ஈடுபட நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூட உங்கள் வாக்குகளை சிந்தித்து ஆதரவு தந்து எம்மை உயர்த்திடுங்கள் என அவர் தெரிவித்தார். (92)

# தேர்தல் பிரசார பிரசுரம் விநியோகித்தவர் கைது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரப்பகுதியில் துண்டுப்பிரசுரத்தினை விநியோகம் செய்த 61 வயதுடைய முதியவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கற்கோவளம் புனித நகரினைச் சேர்ந்த 61 வயதான முதியவர் ஒருவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் அவரைக்கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட முதியவரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(18)

# மடுமாதா ஆலயம் வரை பேருந்து விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து மடுமாதா ஆலயம் வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் போக்குவரத்துச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 5 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பேருந்து சாவகச்சேரி, கொடிகாமம், முழங்காவில் ஊடாக 8.15 மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்தினை அடைந்து பின்னர் அங்கிருந்து 10.15 மணியளவில் மடு மாதா ஆலயத்தினைச் சென்றடையவுள்ளது.

பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் மடுமாதா ஆலயத்திலிருந்து புறப்படும் பேருந்து 2 மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்தினை வந்தடைந்து பின்பு 2.30 மணியளவில் பயணத்தினை ஆரம்பித்து பருத்தித்துறை பேருந்து நிலையத்தினை வந்தடையவுள்ளது.

# மண் சரிவில் சிக்கி கண்டியில் ஒருவர் பலி

கண்டி - அக்குரணை பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காணி ஒன்றை சுத்தம் செய்துகொண்டிருக்கும்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சரிகிறது...

வர்க்க மசகு எண்ணெய் பரல் ஒன்று 50.95 அமெரிக்க டொலருக்கு விற்பனையாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேன்ட் வர்க்க மசகு எண்ணெய் 57 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்ப டுகிறது. உலக சந்தையில் நேற்றைய தினம் மசகு எண்ணெய், கேஸ், தங்கம், வெள்ளி என்பவற்றின் விலை வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நாட்களிலும் எரிபொருள் விலை மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது.

உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்தால் இலங்கையில் எரிபொருள் விலை குறைக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

## மக்கள்...

கைகளில்தான் கடந்த தேர்த லில் என்னை வீட்டுக்கும் அனுப்பி வைத்தீர்கள். உலகமே அஞ்சிய தீவிரவாதத்தை தோற்கடித்தோம். அப்படியான நான் சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் அனைவரையும் கொண்டுவந்து இராணுவ சூழ்ச்சி செய்ததாக கேலி செய்தனர். ஆனால் தேர்தல் முடிந்து நான் எடுத்த முடிவை உலகமே பாராட்டியது.

இதுவரை 892 அரச ஊழியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பிரதமரின் செயலாளரை நெற்றியில் துப்பாக்கி வைத்து விசாரணை செய்தனர். அரச ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். அந்த யுகத்தை நாம் முடிவுக்கு கொண்டு வருவோம். சில அரச ஊழியர்கள் அச்சத்தில் பதவி விலகிச் சென்றுள்ளனர். சீன அதிகாரிகளிடம் விசாரணை செய்தனர்.

அன்று பிரபாகரனிடம் மண்டியிட்ட இவர்கள் அதிகாரத்தில் இருக்கவென ஒப்பந்தம் செய்து கொண்டனர். பிரேமதாஸ புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை மறக்க முடியாது. ஐ.தே.க. காலத்தில் நடந்த ஜே.வி.பி. கலவரம் மற்றும் 600 பொலிஸார் கொல்லப்பட்டது நினைவு இருக்கிறதா? வடக்கில் இராணுவம் தோற்க இடமளித்துள்ளனர்.

நான் துரோகம் செய்துள்ளேனா? நாட்டுக்கு, மக்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் செய்யவில்லை. வெளிநாட்டு சக்திகளிடம் மண்டியிடாது இருந்த என்னை விமர்சிக்கின்றனர். ஆனால் உண்மையான துரோகியை கண்ணாடியில் சென்று முகத்தைப் பார்க்கச் சொல்லுங்கள். மெகா டீல் காரர்கள் ஐ.தே.க.வில் உள்ளனர். நான் தேசிய சொத்துக்களை விற்க இடமளிக்கவில்லை. இதுவா நாம் செய்த தவறு, திருட்டு? மக்களிடம் இருந்து நாம் ஒருபோதும் பணம் திருடவில்லை. பார் லைசன் வழங்கவில்லை. கெசினோ லைசன் வழங்கவில்லை. அனைவரும் பொய் சொல்கின்றனர்.

நாடு ஹெரோயின் போதைப் பொருளால் நிறைந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்க இடமளித்துள்ளனர். ஆனால் நாம் ஹெரோயின் பிடித்தோம். இதுபற்றி பேசிய தேரர்கள் எங்கே? அப்படி பேசியவர்கள் தேசிய பட்டியலில் உள்ளதாக நான் கூறவில்லை சுற்றி உள்ளவர்கள் கூறுகின்றனர். பிரபாகரன் என்னை அழிக்க நினைத்தார். ஆனால் இன்று ரணில் என்னை அழிக்க நினைக்கிறார். பிரபாகரனின் திட்டம் ரணிலின் திட்டமாக மாறியுள்ளதா?

வடக்கு, கிழக்கிற்கு செல்ல இன்று பலர் அஞ்சுகின்றனர். அந்த அளவு நிலைமை மாறியுள்ளது. இனவாதம் பேசியவர்கள் இன்று ஐ.தே.க. பக்கம் உள்ளனர். என் பக்கம் எந்தவொரு அடிப்படைவாதிகளும் இல்லை. நாட்டில் ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும். என் மீது சுமத்தப்படும் குற்றசசாட்டுக்கு மக்களே பதில் அளிக்க வேண்டும். இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## தேர்தலை...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

உள்ளூர் கண்காணிப்பாளர்கள், சர்வதேச கண்காணிப்பாளர், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்களின் கண்காணிப்புடன், இந்தத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். என்ன இருந்தாலும் மேலதிகமாக கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

மேலும் அரச சொத்துக்களை பயன்படுத்துவது, பதவி உயர்வு தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும்.

தேர்தல் பிரசாரங்களில் அரச அதிகாரிகள் மற்றும் கட்டடங்களைப் பயன்படுத்துவது, மாகாண சபைகள் பிரதேச சபைகளின் வாகனங்களை பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அமைச்சர்கள் வாகனங்களைப் பயன்படுத்த முடியும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

அவ்வாறு பயன்படுத்தும் போது வாகனங்களுக்கான எரிபொருளை அவர்களே கொள்வனவு செய்ய வேண்டும் என்பதோடு, ஒரு வாகனத்திற்கான மாத வாடகையாக ஒரு இலட்சம் ரூபா வரை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும்.

சில இடங்களில் திறப்பு விழாக்கள் இருப்பதாகக் கூறி, ஆயிரக்கணக்கான மக்களை அழைத்துச் சென்று தேர்தல் பிரசார நடடிக்கையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

பேருந்து நிலையங்களில், சந்தைகளில் கையேடுகள் விநியோகிக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் அதனை தேர்தலுக்கு முன்பதாக வேட்பாளர்கள் குறைந்தது பிரதேச பொலிஸ் நிலையத்தில் தெரியப்படுத்த வேண்டும்.

மாணவர்களின் பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என வேட்பாளர்களுக்கு அறிவித்தல் பிறப்பிக்கப்படவுள்ளது. பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் கடமை.

கூட்டங்கள் நடைபெறுகின்றது என்பதற்காக முழுப் பிரதேசங்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் ஒலிபெருக்கியை பயன்படுத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## மகிந்த...

தலை முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர்களினால் இம்மனு நேற்று முற்பகல் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டது.

## யார்...

மைத்திரிபால சிறிசேன மகிந்தவை பிரதமராகத் தான் நியமிக்க மாட்டேன் எனக் கூறியிருந்தார்.

இது ஜனநாயக விரோதமானது எனத் தெரிவித்த முன்னாள் நீதியரசர், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தம்மைப் பதவியில் அமர்த்தியமைக்கு நன்றிக்கடன் தீர்க்கும் விதத்தில் நாடாளுமன்ற பெரும்பான்மை இல்லாத ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றும் அவர் தெரிவித்தார்.

## தீவக...

முறைப்பாடு செய்த நிலையில் இவ்விடயம் குறித்து தவிசாளர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்ட துரித முயற்சியினையடுத்து குறித்த பாதை சேவை மீண்டும் சேவையில் ஈடுபடத்தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இடைநிறுத்தப்பட்டிருந்த பாதை சேவையை மீள இயங்குவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கையை மேற்கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பல்வேறு தரப்பட்டோரும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# துறைமுக நகர உருவாக்கம் முட்டுக்கட்டை போட்டதா இந்தியா?



## கோத்தா பரபரப்பு தகவல்

(கொழும்பு)

சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு கடந்த அரசாங்கத்திடம், இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், அழுத்தம் கொடுத்தார் என்று, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இந்தியாவில் பா.ஜ.க. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தேன்.

கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை நிறுத்த வேண்டும் என்பதே அவரது முதன்மையான கோரிக்கையாக இருந்தது.

எமது அரசாங்கத்திடம் அந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது போலவே, இப்போதைய அரசாங்கத்திடமும், நிச்சயம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கும்.

துறைமுக நகரத் திட்டம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதே அவர் கூறிய காரணம். இந்தியாவின் பாதுகாப்புக்கு கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தினால் அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாது என்று முன்னைய அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது.

அந்தக் கோரிக்கையை தற்போதைய அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்கிறது என்று எனக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வன்னி மற்றும் திருமலை, மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் வெளியாகியுள்ளன.

**வன்னி மாவட்டம்**

அந்தோனி அருள்ராசசேகர் - 1
அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ் - 2
அந்தோனிமுத்து அனஸ்ரின் - 3
குலசிங்கம் திலீபன் - 4
பொன்னுத்துரை குணபாலா - 5
விஜயரட்ணம் சுரேந்தர் - 6
சுந்தரம் குமாரசாமி - 7
சுப்பையா சந்துரு - 8
செல்லத்துரை சிறிராமச்சந்திரதாஸ்-9

**மட்டக்களப்பு மாவட்டம்**

அப்துள் ஹாதர் முகமட் நஸ்லி - 1
அப்துள் நசீர் மொகமட் இக்ரம் - 2
கறுப்பையா உதயச்சந்திரன் - 3
கிருஸ்ணபிள்ளை சிவபாலன் - 4
தம்பிப்பிள்ளை சிவானந்தராசா - 5
ஸ்ரீபன் ஜோன் - 6
சாமித்தம்பி சிறிஸ்கந்தராஜா - 7
சுதாகரன் சியாத் - 8

**திருகோணமலை மாவட்டம்**

இராஜப்பு இரவிச்சந்திரன் - 1
இராசையா ஜெயமோகனராஜா - 2
ஞானப்பிரகாசம் பூலோகராஜன் - 3
தங்கராசா புஸ்பராசா - 4
முத்து இருளன் முருகன் - 5
சண்முகம் பாலகணேசன் - 6
சப்தகேசரி குமாரகுலதாஸ் - 7

# பிரசார பேரணி மீது பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஒருவரும் அவரது ஆதரவாளரும் சென்ற வாகனத் தொடரணியை பொலிஸார் நேற்று தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கொழும்பு - அவிசாவளை வீதியில் ஹங்வெல்லயில் இருந்து வந்த அந்த பேரணியை புவக்பிட்டி நகரில் வைத்து கலைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேரணியில் கலந்து கொண்ட 20 வாகனங்களின் இலக்கத் தகடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீளமான வாக்குச்சீட்டு மட்டக்களப்பில் தான்

நாடாளுமன்றத்துக்கு நடைபெறவுள்ள தேர்தலில் இம்முறை மிக நீளமான வாக்குச்சீட்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்கே அச்சிடப்படவுள்ளது. அடுத்தமாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளில் தேர்தல்கள் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே 18 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகளின் மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புநோக்கும் பணிகள் யாவும் முடிந்து அச்சிடுவதற்கு தயார் நிலையில் உள்ளன. ஏனைய நான்கு மாவட்ட வாக்குச் சீட்டுகளின் ஒப்புநோக்கும் பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.


அதேவேளை, இந்தமுறை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

16 அரசியல் கட்சிகளும், 30 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தம் 46 வேட்புமனுக்கள் போட்டிக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதனால், 46 கட்சிகள் மற்றும் குழுக்களின் சின்னங்களை வரிசையாக அச்சிட்டு, அதன் கீழ் விருப்பு இலக்கங்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது.

இதனால் இம்முறை மட்டக்களப்பு மாவட்ட வாக்குச்சீட்டு மிக நீளமானதாக இருக்கும் என்றும் தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மருத்துவமனை ஊழியர்கள் குதித்தனர் போராட்டத்தில்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஊழியர்கள் பணியிலிருந்து நிறுத்தப்பட்ட நிலையில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக குறிப்பிட்ட ஊழியர்கள் முப்பத்தைந்து பேர் ஒப்பந்த அடிப்படையில் சிற்றூழியர்களாக கடமையாற்றி வந்த நிலையில், நேற்று முன்தினம் எந்த வகையான முன்னறிவித்தலும் இன்றி வேலையில் இருந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்து தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்த தமிழ்தேசிய கூட்டமைபின் வடமாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்தன், பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் அங்கஜன் ஆகியோர் தாம் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பர் என ஊழியர்களுக்கு தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை வட மாகாண சுகாதார அமைச்சர் தொலைபேசி மூலம் பாதிக்கப்பட்ட ஊழியாகளுடன் கதைத்தபோதிலும் ஆக்க பூர்வமான பதில் எதனையும் வழங்க முன்வராத நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். இவர்கள் கடமைக்குச் செல்லாது விட்டால் ஏற்கனவே ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கும் வைத்தியசாலைப் பணிகள் பெரும் பாதிப்படையும் என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# தேர்தல் களத்தில் 150 பௌத்த பிக்குகள்

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 150இற்கும் அதிகமான பௌத்த பிக்குகளும் போட்டியில் இறங்கியுள்ளதால், வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் தேர்தல்கள் திணைக்களத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பௌத்த விகாரைகளிலும் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால், இம்முறை 150இற்கும் அதிகமான பௌத்த பிக்குகளும் போட்டியிடுவதால், அவர்கள் தங்கியுள்ள இடங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், வரும் நாடாளுமன்றத்தேர்தலில் எத்தனை வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும், எங்கெங்கு அமைக்கப்படும் என்பது குறித்து இறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை. இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொது பல சேனா 17 மாவட்டங்களில் போட்டியிடுகிறது. ஏனைய அரசியல் கட்சிகளும் பௌத்த பிக்குகளை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளன.

# மலேசியாவில் இடம்பெறும் பயிற்சிக்கு யாழ். ஆணையாளர் தெரிவு

மலேசியா சென். ஜோன்ஸ் அம்புலன்சில் பயிற்சியைப் பெறுவற்காக இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்சில் இருந்து இருவர் தெரிவாகியுள்ளனர்.

இலங்கை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசியத் தலைமையகப் பிரதான நிர்வாக உத்தியோகஸ்தர் பி. எஸ்.டி.பி. ரட்ணாநாயக்கா மற்றும் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான ஒரு வார காலப் பயிற்சி நாளை மலேசியாவில் ஆரம்பமாகின்றது. இலங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையை மேம்படுத்தும் நோக்குடன் இப்பயிற்சி இடம்பெறவுள்ளது.

இலங்கை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத் தளபதி டாக்டர் சரத் சமரகோனினால் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் அனைத்தையும் இருநாட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்சின் தேசியத் தலைமையகங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

அண்மையில் தேசியத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சனுக்கு நீண்ட கால சேவைப் பதக்கத்தை சென். ஜோன் அம்புலன்ஸ் சபையின் தலைவர் டாக்டர் பாலித அபயக்கோன் வழங்கிக் கௌரவித்தார்.

யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் 47 ஆண்டு கால பூர்த்தியை சென்.ஜோன்ஸ் அம்புலன்சில் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)

# 2 கைக்குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வீடொன்றில் கைக்குண்டுகள் இரண்டு நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் யாழ். பொலிஸாரிற்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே விசேட அதிரடிப் படையினர் செயலிழந்த நிலையிலுள்ள இக்கைக்குண்டுகளை கண்டெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.